Koviloor Digital Library

சிறுபாணாற்றுப்படை

அழகப்பா பல்கலைக்கழகம் ★ வளர் தமிழ் நூலகம் ★ காரைக்குடி

மு. வை. அரவிந்தன், எம்.ஓ.எல்.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி
வேலூர், வ. ஆ.

ALAGAPPA ... LIBRARY
KARAIKUDI-623003

VTN0 60

முத்துப் பதிப்பகம்
53. பாண்டி ரோடு • வளவனூர்

Koviloor Digital Library

முதற் பதிப்பு ஆகஸ்டு - 1976

[பதிப்புரிமை பெற்றது]

விலை ரூ. 3-25

ALAGAPPA COLLEGE LIBRARY
PGL
2185
KARAIKUDI-623003

அச்சிட்டோர்:
பிரபு பிரிண்டிங் ஹவுஸ்,
48/42, வடக்கு உஸ்மான் சாலை,
தி. நகர், சென்னை-17.

Koviloor Digital Library

பதிப்புரை

பழந் தமிழ் நாட்டு மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றை உலகுக்கு எடுத்துரைக்கும் கருவூலங்கள் சங்கஇலக்கியங்கள்.

சங்க இலக்கியத்தில், பத்துப் பாட்டுள் ஒன்றாகிய 'சிறுபாணாற்றுப்படை' நல்லியக் கோடன் மீது நத்தத்தனார் எழுதிய சிறந்த நூலாகும்.

நத்தத்தனார் நல்லியக் கோடனைப் பற்றிப் பாடிய நற்கருப்பஞ் சாற்றினை நமக்குப் பிழிந்து வடித்துள்ளார் இந் நூலாசிரியர்.

சிறந்த திறனாய்வான இந் நூலினைத் தமிழகம் நன்கு வரவேற்கும் என நம்புகின்றோம்.

பதிப்பகத்தார்

Koviloor Digital Library

இந்த நூல்

1965-இல், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஓ.எல். இரண்டாம் ஆண்டுத் தேர்விற்குச் சிறுபாணாற்றுப்படையைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை நான் எழுதினேன். அவற்றைத் தமிழறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கனாரும், அமரர் டாக்டர் சி. இலக்குவனாரும் தேர்வாளராய் இருந்து மதிப்பிட்டனர்.

அப்போது இலக்குவனார் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு வேலூர்ச் சிறையில் இருந்தார். ஆதலின் சிறுபாணாற்றுப்படை ஆய்வு சிறைக்குச் சென்று வந்தது. சிறையிலும் தமிழாய்வில் தோய்ந்து மகிழ்ந்த அந்தத் தமிழ் மறவர், என் ஆராய்ச்சியைப் பெரிதும் விரும்பிப் போற்றினார்; பி. எச். டி. பட்டம் பெற ஆராய்ச்சி மாணவனாய்ச் சேருமாறு ஊக்குவித்தார்.

இந்த நூல் வெளிவரும்போது, அவரை நினைத்து அஞ்சலி செய்கின்றேன்.

நான் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வரும்போது எனக்கு மேற்பார்வையாளராக, செந்நாப்புலவர் அ. நடேச முதலியார் எனக்கு வாய்த்தார்கள். அமரர் உலகஊழியர் சில பகுதிகளைப் பார்வையிட்டு உதவினார்கள். இருபெரும் தமிழறிஞர்களுக்கும், அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

இந்தத் திறனாய்வு நூலை, தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்கும் என்று நம்புகிறேன்.

மு. வை. அரவிந்தன்

Koviloor Digital Library

ALA... LIBRARY - KA...

ஆற்றுப்படை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இந்தத் தமிழ் மண்ணில் மாபெரும் வீரர்கள் உலவி வந்தனர்; உலகம் போற்றும் கலைஞர்கள் பலர் வாழ்ந்தனர். மக்கள் அனைவரும் போற்றி வணங்கும் சான்றோர் பலர் இருந்தனர். தமிழ் வணிகரின் கப்பல்கள் அலைகடல் மீது முத்தும் பொன்னும் மணியும் சுமந்து உலவி வந்தன. தமிழ் வேந்தரின் வெற்றிக் கொடிகள் இமயத்தின் உச்சியிலும் கங்கைக் கரையிலும் ஈழத்திலும் பட்டொளி வீசிப் பறந்தன. இவற்றை எல்லாம் எண்ணும்பொழுது 'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு'—என்று பாரதியார் கவிமுரசு கொட்டியது முற்றிலும் பொருத்தமானது என்று தெளிவாகிறது. சீரும் சிறப்புமாய் வாழ்ந்த தமிழகம் உரோமப் பேரரசோடும், கிரேக்க நாகரிகத்தோடும் கைகோத்து உலகத்தின் கண்களுக்குமுன்பு மின்னிப் பொலிந்தது. அதன் செல்வ வளம் பிற நாட்டார் கூறும் கதையிலும் வரலாற்றிலும் பெருமையோடும் இடம் பெற்றது. தமிழகத்திற்குக் கடல்வழி காண ஹிப்பாலஸ் போன்ற கிரேக்க மாலுமிகள் முயன்று வெற்றி பெற்றனர். பிற நாட்டு வணிகரையும் கலைஞரையும் அறிஞரையும் தன்பால் ஈர்த்துப் பெருமையோடு விளங்கியது அக்காலத் தமிழகம்.

மக்கள் இலக்கியம்

இத்தகைய சூழ்நிலையில் தமிழ்க் கலைகள் செழித்து வளர்ந்தன. தமிழ்மொழியில் இறவாப் புகழுடைய இலக்

Koviloor Digital Library

கியங்கள் மலர்ந்தன. தமிழ்ப் புலவர்கள், தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ் மொழி—என்ற உணர்ச்சியோடு விளங்கினர்; தமிழ் மக்களையே பொருளாகக்கொண்டு பாடல்கள் இயற்றினர்; தமிழ் நாட்டு இயற்கை வளத்தைச் சலிப்பின்றிப் பாடினர்; தமிழ் மொழியை வளப்படுத்தினர்; இவ்வுலக வாழ்வைப் புறக்கணித்துவிடாமல் வாழ்வாங்கு வாழ வழி காட்டினர்; சிறப்பாக வாழ்ந்தவர்களை எல்லாம் வாயாரப் புகழ்ந்தனர். அக்காலப் புலவர்கள் இயற்றிய பாடல்கள் எல்லாம் வாழ்வில் மலர்ந்தவை; வாழ்ந்த மக்களைப் பற்றியவை.

பாடாண் திணை

தமிழ் மண்ணில் வாழ்ந்த மக்களின் பல்வேறு வகையான வாழ்க்கை நிலையைத் தமிழ்ப் புலவர்கள் விரும்பிப் பாடினர்; ஒருவர் வாழ்விலேயே ஏற்படும் பல்வேறு நிலைகளையும் அவர்கள் பாடத் தவறவில்லை. அவர்கள் பாடிய பாடல்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு, சங்க நூல்கள் என்ற பெயரால் இன்று வழங்கிவருகின்றன. அந் நூல்கள் அகம், புறம்—என்ற இரு பெரும் பிரிவுகளுள் அடங்கும்.

சிறந்த ஆண்மகன் ஒருவனது வலிமை, வள்ளன்மை, அருள்—ஆகிய பண்புகளைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் புறப்பொருளில்—பாடாண் திணையில் அடங்கும். பாடாண் திணையின் பல்வேறு உட்பிரிவுகளில் ஆற்றுப்படையும் ஒன்று.

ஆற்றுப்படையின் இலக்கணம்

ஆற்றுப்படைப் பாடலைப் பற்றித் தொல்காப்பியர் இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றார். சொல்லதிகாரத்தில் (462) “முன்னிலை குறித்து நின்ற ஒருமைச் சொல், பன்மையொடு முடிந்ததாயினும் நீக்கப்படாது. அம் முடிபு ஆற்றுப் படைச் செய்யுளிடத்துப் போற்றி உணரப்படும்” என்ற கருத்துப்பட,

Koviloor Digital Library

"முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்"

(சொல். 462)

என்று கூறுகின்றார். இப் பகுதிக்கு உரை எழுதும்போது சேனாவரையர், "சுற்றத்தோடு சுற்றத் தலைவனை ஆற்றுப் படுத்தற் கண்ணது இம் மயக்கம்" என்று விளக்குகின்றார். திருமுருகாற்றுப்படையை நினைவில்கொண்டு, அதில் இத் தகைய மயக்கம் இல்லை என்று உணர்த்தவே இவ்வாறு அவர் கூறுகின்றார்.

தொல்காப்பியர், 'புறத்திணை இயலுள், பாடாண் பாட்டின் பல்வேறு துறைகளை விளக்கும்போது,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்" (புறத். 36)

என்று ஆற்றுப்படையைப் பற்றிக் கூறுகின்றார். "கூத்தரா யினும், பாணராயினும், பொருநராயினும், விறலியாயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சி யால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனவும் சொன்ன பக்கமும்"—என்பது அப் பகுதிக்கு இளம்பூரணர் எழுதும் உரையாகும். ஆற்றுப்படைப் பாட்டில் "ஆற்றினது அருமையும் அவன் (வள்ளல்) ஊரது பண்பும் கூறப்படும்" என்றும் அவர் விளக்கி யுள்ளார்.

பாடாண்திணையில் 'அமரர்கண் முடியும் அறுவகை' (புறத். 21) என்ற பகுதியை விளக்கும்போது இளம்பூரணர், "அமரர்கண் முடியும் கொடி நிலை, கந்தழி, வள்ளி, புலவ ராற்றுப்படை, புகழ்நல், பரவல்"—என்ற ஆறினையும்

Koviloor Digital Library

குறிப்பிடுகின்றார். இங்கே புலவராற்றுப்படை கூறியிருப்பது கருதத்தக்கது.

புறப்பொருள் வெண்பாமாலையுள் ஐயனாரிதனார், பாடாண் படலத்தில் தொல்காப்பியர் கருத்தையும் இளம்பூரணர் உரையையும் தழுவிய நால்வகை ஆற்றுப்படைகளோடு புலவராற்றுப் படையையும் கூறுகின்றார்.

பன்னிரு பாட்டியல், ஆற்றுப்படையின் இலக்கணத்தை,

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை"

(ப. பாட். 202)

என்று கூறுகின்றது. இதில் ஐவகை ஆற்றுப்படைகளும் கூறப்பட்டுள்ளன.

ஆற்றுப்படைப் பாடல்கள்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் பாணாற்றுப்படை ஏழும் (68, 69, 70, 138, 141, 155, 180); விறலியாற்றுப்படை நான்கும் (64, 103, 105, 133); புலவராற்றுப்படை இரண்டும் (48, 49) இடம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை இரண்டும் (66, 67); விறலியாற்றுப்படை ஆறும் (40, 49, 57, 60, 78, 87) உள்ளன. பத்துப் பாட்டில் ஐந்து ஆற்றுப் படைகள் உள்ளன. முதற் பாட்டுத் திருமுருகாற்றுப்படை அல்லது புலவராற்றுப்படை எனப்படும். அப்பாடலில் வந்துள்ள 'முருகாற்றுப்படுத்த' (244) என்ற தொடரால், அது திருமுருகாற்றுப்படை என்று பெயர் பெற்றது என்பர். இரண்டாவதாகப் பொருநராற்றுப்படையும், மூன்றாவ

Koviloor Digital Library

தாகச் சிறுபாணாற்றுப் படையும், நான்காவதாகப் பெரும் பாணாற்றுப்படையும், பத்தாவதாகக் கூத்தராற்றுப்படை யும் இடம்பெற்றுள்ளன. கூத்தராற்றுப்படை, அப்பாடலில் வரும் 'மலைபடுகடாஅம்' என்ற தொடரால் (348) இன்று வழங்கிவருகின்றது.

பாடாண் திணையுள் ஒரு துறையாக இருந்த ஆற்றுப் படை தொடக்கத்தில் சிறிய பாடல்களால் பாடப்பட் டிருக்கும். பின்னரே அதைப் பற்றி நீண்ட பாடல்கள் தோன்றி இருக்கும். சங்க காலத்திற்குப்பின் அது தனிப் பிரபந்தமாக வளர்ந்து விட்டது. பாட்டியல் நூல்கள் அப் பிரபந்தத்திற்கு இலக்கணம் கூறின. 'கலம்பகம்' தோன்றிய காலத்தில், கலம்பகத்தின் ஓர் உறுப்பாக ஆற்றுபபடை அமைந்தது.

இரவலன் கூற்று

ஆற்றுப்படையின் நோக்கம் புரவலனின் கொடைச் சிறப்பையே கூறுவதாய் இருப்பினும், அச் சிறப்பு இரவலனின் வாயிலாக வெளிப்படும்போதுதான் உயர்ந்து விளங்குகின்றது. புரவலன் தன் கொடைச் சிறப்பைத் தானே மேம்படுத்திக் கூறிக் கொண்டால், பரிசு பெற்ற கலைஞன் மான உணர்ச்சியால் துன்புறுவான்; 'இத்தகைய வனிடம் ஏன் பரிசு பெற்றேன்?' என்று வருந்துவான். பின்னர் அவ் வள்ளலிடம் மீண்டும் செல்லாததோடு, பிற ரையும் செல்ல ஒட்டாமல் தடுத்து நிறுத்துவான். ஆனால் இரவலன் தனக்குப் பரிசளித்த வள்ளலின் கொடைச் சிறப் பைக் கூறினால், வள்ளல் கேட்டு மகிழ்வான். 'பிறர்க்குத் தன்னாலும் உதவ முடிந்ததே!' என்று பூரிப்பான்; மேன் மேலும் கொடுக்க விரும்புவான். ஏனைய செல்வரும் அவனைப் பின்பற்றுவர். இதனால்தான் புலவர்கள் தாம் பாடிய ஆற்றுப்படையைப் பரிசு பெற்று மீளும் இரவலன் கூற்றாக அமைத்தனர்.

Koviloor Digital Library

ஆற்றுப்படைப் பாட்டில், இரவலன் இயல்பும் புரவலன் பண்பும் ஒன்றோடு ஒன்று கைகோத்து இணைந்து செல்வதைக் காணலாம். ஒன்று மற்றதனால் சிறப்பும் பெருமையும் அடைகின்றது. இரவலனின் வறுமை, புரவலனின் செல்வத்தை நாடுகின்றது. கலைஞனின் கலைத்திறன், வள்ளலின் கலைச் சுவையால் வளர்கின்றது. பாணனின் மான உணர்ச்சி, கொடையாளியின் பெருந்தன்மையால் வாழ்வு பெறுகின்றது. வறியவனின் தேவை, செல்வனின் கொடையால் நிறைவு பெறுகின்றது.

கலைக்கு வழிகாட்டல்

கலை உலகத்தில் போட்டியும் பொறாமையும் இயல்பாக உள்ளவை. அவ்வுலகில் ஒருவர் வீழ்ச்சி மற்றவரின் உயர்ச்சிக்கு உதவி புரிவதுண்டு. போட்டியில், தான் மட்டுமே வெற்றி பெற்றுச் சிறக்க வேண்டும் என்று ஒவ்வொரு கலையுள்ளமும் விரும்பும் தான் பெற்ற தகுதியைப் பிறர் பெறுவதை விரும்பாத தன்மை கலை நெஞ்சத்திற்கு உண்டு. தன் உயர்வுக்குக் காரணமாய் இருந்த நல்வழியைப் பிறர் அறிய ஒட்டாமல் அந்நெஞ்சம் மூடி மறைப்பது உண்டு. பிறர் வந்து அணுகி, உதவுமாறு கேட்கும்போதும் அந்நெஞ்சம் புறக்கணிப்பது உண்டு. உயர்வு பெற்றுவிட்ட கலைஞன் மற்றைக் கலைஞர்களோடு பழகாமல் ஒதுங்கி நின்று தன் உயர்வைக் காத்துக்கொள்ள நினைப்பதும் உண்டு.

கலை நெஞ்சத்தின் இயல்புகளை நன்கு அறிந்த புலவர்கள், கலைஞர்களிடம் இருக்கவேண்டிய நல்லியல்புகளை ஆற்றுப்படையின் வாயிலாக வெளியிட்டனர்; வாழ்வில் வளமும் சிறப்பும் பெற்று உயர்ந்துவிட்ட கலைஞன், முன்னேற்றமின்றி வறுமையில் துன்புறும் மற்றக் கலைஞர்களுக்கு நல்வழிகாட்டி உதவவேண்டும் என்று உணர்த்தினர்.

Koviloor Digital Library

இயற்கையின் எழில்

சங்ககாலப் புலவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர்; இயற்கையின் பல்வேறு நுட்பங்களை அறிந்திருந்தனர். அதனால் இயற்கையின் எழிலைப் பாடுவதில் அவர்களுக்குத் தணியாத வேட்கை இருந்தது. ஆற்றுப் படைப் பாடல், இயற்கையைப் புனைந்து பாடும் ஆர்வத்தைத் தணித்துக் கொள்ளப் பெரிதும் உதவியது. கலைஞர்களைப் பேணும் வள்ளலுக்கு உரிய நாட்டின் இயற்கை வளம் ஆற்றுப்படையில் இடம் பெற்றது. கலைஞர்கள் சென்ற நீண்ட வழிகள், வழி நெடுக இருந்த ஐவகை நிலங்களின் இனிய தோற்றம், அந்நிலங்களில் இருந்த பயிர் வகைகளின் செழுமை, உயிர் வகைகளின் எக்களிப்பு, மக்கள் வாழும் ஊரைச் சுற்றிலும் விளங்கிய தண்பொழில்- ஆகிய யாவும் இனிது பாடப்பட்டன.

பரிசில் பெறவரும் கலைஞன் எங்கிருந்து புறப்பட்டு வரினும், வள்ளலுக்கு உரிய நாட்டில் நுழைந்தபின் உள்ள வழியும், அந்த வழியில் இருக்கும் ஊர்களுமே ஆற்றுப்படையில் பாடப்பட்டன. வள்ளலுக்கு உரிய நாட்டில் வாழும் மக்கள் வாழ்க்கையின் சிறப்பு, நாகரிகம் ஆகியவையே பாடப்பட்டன. ஆற்றுப்படை குறிப்பிடும் ஊர்கள் யாவும் வள்ளலுக்கு உரியவையாய் இருந்தன.

சோற்றுப் பாட்டா?

ஆற்றுப்படைப் பாடலைப் போற்றுவோர் ஒருபுறம் இருக்க, அதனைச் சோற்றுப் பாடல் என்று தூற்றுபவரும் மற்றொருபுறம் இருக்கின்றனர்.

அவர்கள் தூற்றுவதற்கு ஏற்ப, ஆற்றுப்படையில் வரும் கலைஞர்கள் வறுமையுற்றுச் சோறின்றி வாடுகின்றனர்; வள்ளலை நாடிச் செலும் வழி எல்லாம் விருந்தினராய்த் தங்கிச் சோறு பெறுகின்றனர்; வள்ளலிடம் சென்று வளமான கொழுஞ் சோறு உண்டு மகிழ்ந்து ஊருக்குத்

Koviloor Digital Library

திரும்புகின்றனர்; தாம் சந்திக்கும் இரவலரிடம் சோறு கிடைக்கும் இடங்களை எல்லாம் பெருமையோடு குறிப்பிடுகின்றன. இதனால்தான் சிலர் ஆற்றுப்படைப் பாடலைச் சோற்றுப் பாட்டு என்று இகழ்ந்து கூறுகின்றனர்.

வளமான நாட்டையும், அதில் உள்ள ஊர்களையும் படம் பிடித்துக் காட்டும் ஆர்வம், இயற்கையின் எழிலைப் பாடும் பெரு வேட்கை. தம் காலத்து நாகரிகத்தை வருங் காலப் பரம்பரையினர்க்கு உணர்த்த முயலும் கடமை உணர்ச்சி, சாகும் இயல்புடைய மனிதன் சாவாத வாழ்வு பெறத் துடிக்கும் துடிப்பு, கலை உலகத்தில் கலையைப் பேணிக் காக்கும் முறையை விளக்க மேற்கொள்ளும் எழுச்சி, விருந்தோம்பித் தம்மை ஆதரித்த மக்களுக்கும், பரிசு நல்கி வாழ்வளித்த வள்ளலுக்கும் நன்றிகூற எழும் தூய உணர்வு-ஆகியவையே ஆற்றுப்படைப் பாடலைத் தோற்றுவித்தன எனலாம். ஆற்றுப்படைப் பாடலைச் சோற்றுப் பாட்டு என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும்; அது தோன்றியதன் உண்மைக் காரணத்தை அறியாமல் கூறுவதாகும்.

காலம் செய்த மாறுதல்

தமிழ்க் கலையை நம்பி வாழும் பாணரும் பொருநரும் விறலியும் இன்று இல்லை. அவர்களுடைய கலைகளால் மகிழ்ந்து பரிசு நல்கும் வள்ளல்கள் இன்று இல்லை. வள்ளல்களைக் கலைஞர்கள் நாடிச் செல்லும் வழக்கம் இன்று இல்லை. செல்வச் செழிப்போடு வாழ்ந்த பல பெரு நகரங்கள் இன்று இல்லை. ஆற்றுப்படைப் பாடலைப் படித்துவிட்டு அங்கே செல்வோர் இன்று இல்லை. தமிழ்நாடும், நகரும், வழியும், மக்கள் வாழ்க்கையும் எத்துணையோ மாறுதல்களைப் பெற்று விட்டன.

வாழும் இலக்கியம்

காலம் பல மாறுதல்களைச் செய்துவிட்டபோதும் ஆற்றுப் படைப் பாடல்களுக்கு வாழ்வு உண்டு. அப்பாடல்கள்

Koviloor Digital Library

சிறந்த இலக்கியமாகக் கருதிக் கற்கப்படும். இலக்கியச் சுவையை விரும்புவோர் அவற்றைக் கற்பர்; சொல்லிலும் பொருளிலும் நாட்டம் செலுத்துவோர் கற்பர்; பண்டைய நாகரிகத்தை வரலாற்று நோக்குடன் அறிய விரும்புவோர் கற்பர்; வாழ்ந்த இனத்தின் பண்பாட்டையும், உயர்ந்த நோக்கத்தையும் அறிய விரும்புவோர் கற்பர்; இயற்கை வனப்பில் ஈடுபடுவோர் கற்றுப் பயனடைவர். ஆற்றுப் படைப் பாடல்கள், வாழ்வும் வளனும் பெற்றுச் சிறந்து விளங்கும் கலைஞன் 'மற்றக் கலைஞரை எவ்வாறு காக்க வேண்டும், கலைக்கு எவ்வாறு தொண்டு செய்ய வேண்டும்' என்பதை உணர்த்திக் கொண்டே இருக்கும்.

ஆற்றுப்படைப் பாடல்கள் குறிப்பிடும் நாட்டில் இன்று வாழ்ந்து வரும் மக்கள் தம் நாட்டையும், ஊரையும் பாடும் பழம் பாடலைப் போற்றி மதிப்பர்; தம் முன்னோர்களின் நாகரிகத்தையும், விழுமிய கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் பாடி வைத்த புலவருக்கு நன்றி கூறிக் கற்று மகிழ்வர்; தம் முன்னோர் வாழ்ந்த பெருமையை எண்ணி ஊக்கம் கொள்வர்; தம் நாடும் ஊரும் பழம் பாட்டில் இடம் பெற்றிருப்பதைப் பெருமையோடு பிறர்க்குக் கூறி இன்புறுவர். எனவே ஆற்றுப்படைப் பாடல்கள் வாழும் இலக்கியமாய் விளங்கி வரும்.

Koviloor Digital Library

சிறுபாணாற்றுப்படை:

அமைப்பும் அழகும்

பத்துப் பாட்டினுள், சிறுபாணாற்றுப்படை மூன்றாவதாக இடம் பெற்றுள்ளது. இது 269 அடிகள் கொண்ட ஆசிரியப் பாவால் ஆனது; வள்ளலிடம் பரிசில் பெற்று வரும் பாணன், பரிசில் பெற வள்ளலை நாடிச் செல்லும் பாணனை ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. இசையில் வல்ல கலைஞர் முற்காலத்தில் பாணர் எனப்பட்டனர். பேரியாழை இசைத்தவர் பெரும்பாணர் என்றும், சீறியாழை இசைத்தவர் சிறு பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். சிறு பாணனை ஆற்றுப் படுத்தும் பாடல் சிறுபாணாற்றுப்படை என்று பெயர் பெற்றது.

(சிறுபாண் : 35)

இப்பாடலை இயற்றிய புலவரின் இயற்பெயர் தத்தனார் என்பதாகும். கல்வி மேம்பாடு பற்றி நத்தத்தனார் என்ற பெயர் பின்னர் இவருக்கு வழங்கலாயிற்று. இப் பெயருடன் வேறு சில புலவர்கள் வாழ்ந்ததால். இவரை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்று ஊர்ப் பெயரையும் சேர்த்து வழங்கினர்.

சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன் என்பவன். இவன் ஓவியர் குடியில் தோன்றியவன். ஓவியர் மகன் என்பது, ஓய்மான் என்று மருவியதால் ஓவியர் குடியினர் ஆண்ட நாடு

Koviloor Digital Library

ஓய்மான் நாடு எனப்பட்டது. ஓய்மான் பரம்பரையில் வில்லியாதன் என்ற வேருெரு மன்னன் இருந்தான் என்பது புறநானூற்றுப் பாடலால் (379) தெரிகின்றது.

சங்க காலத்தில் வாழ்ந்த பாரி, அதியமான், பேகன் முதலிய வள்ளல்கள் எழுவரும் இறந்த பின்னர்ச் சிறு பாணுற்றுப் படை இயற்றப்பட்டுள்ளது. எனவே இப் பாடல் தோன்றிய காலம் சங்க காலத்தின் இறுதிக்காலமாகிய கி. பி. 250 என்னலாம்.

பாட்டின் திறம்

திறமான பாட்டின் தொடக்கமே, கற்போர் நெஞ்சத்தைக் கவர்ந்து விடுகின்றது; அதனை அடுத்துவரும் ஒவ்வொரு பகுதியும், அடுத்தடுத்து என்ன என்று ஆவலோடு எதிர்பார்க்கச் செய்து நெஞ்சத்தை ஈர்த்துச் செல்கின்றது; முடிவு, இதற்குள் முடிந்து விட்டதே என்ற எண்ணத்தை உண்டாக்கிக் கற்போர் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கின்றது.

திறமான பாட்டிற்கு உரிய எல்லாப் பண்புகளும் சிறு பாணுற்றுப் படையில் உண்டு. அதில் இடம் பெற்றுள்ள பல்வேறு காட்சியும் கருத்தும் தெளிவாகத் தனித்தனியே அமைந்து, தொடர்புபட்டுச் செல்லுகின்றன. வெவ்வேறு நிறமுடைய மலர்களைக்கொண்டு அளந்து கட்டிய வண்ண மலர்மாலையைப்போல, அளவோடு அமைந்த காட்சிகள் அப்பாடலில் முறையாக இடம் பெறுகின்றன. சில காட்சிகள் மிகுதியானவை என்று விளக்குவதற்கோ, முன் பின்னுக மாற்றி அமைக்கக் கருதுவதற்கோ அதில் இடமில்லை.

மாநில மடந்தைக்கு மூங்கிலே தோள்; மலையே மார்பு மலையிலே பெருகிவரும் அருவி, அவள் மார்பின்மீது கிடந்து அசையும் முத்துமாலை போல தோன்றுகிறது—என்று தம் பாட்டை நத்தத்தனுர் தொடங்குகின்ருர். கற்பனை

Koviloor Digital Library

உலகத்தில், மிக உயர்ந்த இடத்தில் நின்றுகொண்டு, கவிஞருடன் சேர்ந்து நில மடந்தையின் தோற்றத்தை நாம் காண்கின்றோம். நம் நெஞ்சம் விரிகின்றது. புதிய காட்சி தோன்றுகின்றது, பாட்டின் தொடக்கமே நம் நெஞ்சத்தைக் கவர்கின்றது.

பின்னர்க் கவிஞர், பாலை நெடுவழியைக் காட்டி அதன் கொடுமையைப் புலப்படுத்துகின்றார்; பாலை நிலத்தில் மரா மரத்தின் வரி நிழலில் யாழ்ப் பாணர்கள் தங்கி இருப்பதைக் காட்டுகின்றார். கொடிய பாலை வழியில், வறுமையால் துன்புற்று வாடி இளைத்த பாணர்களைக் காட்டும் நுட்பம் எண்ணி மகிழத்தக்கது. பாணர்களின் நெஞ்சத்தில் மூண்டுள்ள துன்பத்தை மிகுதிப்படுத்திக் காட்ட, பாலை நிலத்தைப் பின்னணியாக அமைக்கின்றார் புலவர்.

அடுத்த பகுதியில், விறலியரின் மெல்லிய அடிகளைச் சூழ்ந்துள்ள சிறுவர்கள், விறலியரின் மெல்லிய அடிகளை நோய் தீரப் பிடித்துவிடும் காட்சியும், சீறியாழை மீட்டி மகிழ்வூட்டும் பாணனின் கலைத் திறனும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து மறைந்த மக்களை வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றது.

பரிசில் பெற்று மீளும் பாணர்கள், பாலை வழியில் முன்னர்க் குறிப்பிட்ட பாணர்களைச் சந்திக்கின்றனர். பரிசில் பெற்ற பாணரின் தலைவன், வறுமையால் வாடும் பாணரிடம், "சேர நாட்டு வஞ்சி தரும் பரிசில் சிறியது; பாண்டிய நாட்டு மதுரை தரும் பொருள் சிறியது; சோழ நாட்டு உறந்தை வழங்கும் செல்வம் சிறியது" என்று கூறி அங்கெல்லாம் போக வேண்டாம் என்று குறிப்பாக உணர்த்துகின்றான். முடியுடை மன்னர் மூவர் தலை நகரங்களும் தரும் பரிசில்களைச் சிறியவையாக்கி, வளமான பரிசு நல்கும் நகர் எதுவோ என்று அறியும் வேட்கை நம் நெஞ்சத்தில் இயல்பாக எழுகின்றது.

Koviloor Digital Library

அதன் பின் வரும் பகுதி, நம் உள்ளத்தில் எழுந்த வினாவிற்கு விடையாக அமையாமல் நம் ஆவலை மேலும் தூண்டுவதாகவே உள்ளது. பேகன், பாரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி ஆகிய ஏழு வள்ளல்களும் கொடுத்த கொடையை ஒருவனாகவே இருந்து கொடுக்கும் வள்ளல் என்று அமைகின்றது அப்பகுதி. அந்த ஒரு வள்ளலையும் ஊரும் பேரும் கூறி எளிதாக அறிமுகப்படுத்தி விடவில்லை. அடுத்த பகுதியில் அவன் முன்னோர் இருந்து ஆண்ட ஊரின் வளன், அவனது தோற்றப்பொலிவு குடிப்பெருமை, வீரம், கொடை ஆகிய யாவும் விளக்கப்பட்ட பின்னரே அவ்வள்ளலின் பெயர் நல்லியக் கோடன் என்று கூறப்படுகின்றது.

வள்ளலின் கொடைச் சிறப்பை மிகுதிப்படுத்திக் காட்டும் வகையில் அடுத்த பகுதி அமைகின்றது. நல்லியக் கோடனைக் காணுமுன் பாணர்களுக்கு இருந்த வறுமை, அவனைக் கண்டபின் ஏற்பட்ட வளமை-ஆகிய இரண்டும் கற்போர் நெஞ்சத்தில் நன்கு பதியுமாறு அதில் கூறப்பட்டுள்ளன.

இவ்வளவும் கேட்டபின், பாணர்கள் அவ்வள்ளல் வாழும் நகரம், அங்குச் செல்வதற்கு உரிய வழி - ஆகிய வற்றைத் தூண்டிய பின்னரே, நல்லியக்கோடன் வாழும் கிடங்கிலுக்குச் செல்லும் வழியும், வழியில் உள்ள ஊர் களும், அங்குள்ள மக்களின் பண்பும் கூறப்படுகின்றன. பிறகு கிடங்கிலின் செழுமையும், மன்னனின் அரண்மனையும் பாட்டில் சிறப்பாக இடம் பெறுகின்றன. அரண்மனையின் உள்ளே அரியணையில் பெருமிதத்தோடு வீற்றிருக்கும் வள்ளலின் மாண்பும், அவனைச் சூழ்ந்திருக்கும் பல்வேறு மாந்தரின் இயல்பும், அவர்கள் கூறும் புகழ் மொழிகளும் கூறப்படுகின்றன.

நல்லியக் கோடனின் அவையில், பாணர்களின் கையில் உள்ள சீறியாழ் சிறப்போடு வெளியே தோன்றி,

Koviloor Digital Library

இன்னிசை எழுப்பும் என்ற கருத்தில், யாழின் தோற்றமும் அமைப்பும் பின் கூறப்படுகின்றன. யாழிசையோடு பாணர்கள் பாடவேண்டிய பாட்டின் பொருளும் தரப்படுகின்றது. யாழிசை கேட்டு மகிழும் வள்ளல் பாணர்க்கு நல்கும் உடையின் உயர்வும், உணவின் சிறப்பும் அடுத்த பகுதியில் இடம் பெறுகின்றன. வள்ளல் கொடுக்க இருக்கும் பரிசுப் பொருள் மிக அழகாகப் புனையப்படுகின்றது. பாட்டின் கருத்து இதோடு முடிகின்றது என்னலாம்.

இவ்வாறு முடிப்பதைப் புலவர் விரும்பாமல், நல்லியக் கோடனுக்கு உரிய மலையில் சூழ்ந்துள்ள வெண்முகில் இடையே மயில்தன் தோகையை விரித்து ஆடும் அழகைப் பாடி இனிது முடிக்கின்றார். பாட்டின் முடிவு நம் உள்ளத்தைக் கவர்ந்து என்றும் நீங்காத நினைவோடு பசுமையாய் பொலிகின்றது.

பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்;

—பாரதியார்.

Koviloor Digital Library

சிறுபாணாற்றுப்படை மூலம்

பாலை நெடுவழி

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்
அயில்உருப் பனைய வாகி ஐதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ

வாணுதல் விறலியர்

ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில்மயிற் குளிக்கும் சாயல் சாஅய்
உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ
வயங்கிழை உலறிய அடியின் அடிதொடர்ந்து
ஈர்ந்துநிலந் தோயும் இரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென

Koviloor Digital Library

மால்வரை ஒழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி ஒசி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சே றிகுதரும் எயிற்றின் எயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்

கல்லா இளையர்

நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர

முதுவாய் இரவலன்

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூர் எவ்வமொடு துயர்ஆற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவாய் இரவல!

வருபுனல் வாயில் வஞ்சி

கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயரா

Koviloor Digital Library

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்
வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே

தமிழ் நிலை பெற்ற மதுரை

அதாஅன்று
நறவுவாய் உறைக்கும் நாகுமுதிர் நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி அயிலுளி பொருத
கைபுனை செப்பம் கடைந்த மார்பின்
செய்பூங் கண்ணி செவிமுதல் திருத்தி
நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த

மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கித்
தோள்புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற

கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்
தென்புலம் காவலர் மருமான் ஒன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே

ஓடாப் பூட்கை உறந்தை

அதாஅன்று
நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை
ஓவத் தன்ன உண்டுறை மருங்கில்

Koviloor Digital Library

கோவத் தன்ன கொங்குசேர்பு உறைத்தலின்
வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசில் அங்கை அரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொன் கொட்டை

ஏம இன்துணை தழீஇ இறகுளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண்பணை தழீஇய தளரா இருக்கைக்
குணபுலம் காவலர் மருமான் ஒன்னார்
ஓங்கெயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்

தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே

ஈகை பூண்ட எழுவர்

அதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந் திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் சுரும்புண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்

பறம்பின் கோமான் பாரியும் கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த
அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும் நிழல்திகழ்.

நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த

Koviloor Digital Library

சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும் மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி

அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும் கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்

துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும் நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு
எழுசமம் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்

கோடியர் புரவலன்

விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறையாடு மகளிர்க்குத் தோள்புணை ஆகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா இலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா இலங்கை மன்னருள்ளும்

மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழல்தயங்கு திருந்தடிப்
பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை

Koviloor Digital Library

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபின் தன்னும் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாள் சென்றனம் ஆக இந்நாள்

வறுமையும் செல்வமும்

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவ ணின்றும் வருதும்

நீயிரும் செல்க

—நீயிரும்
இவணயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்

எயிற்பட்டின விருந்து

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்

Koviloor Digital Library

நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின்
ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்

கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறூஉம் மாசறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்

தளையவிழ் தெரியல் தகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி அவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயின் பெறுகுவிர்

வேலூர் விருந்து

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயில் அவிழவும்

கொழுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்
செழுங் குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கால் அருவி வியன்மலை மூழ்கிச்

சுடர்கால் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வேல் நுதியின் பூத்த கேணி
விறல் வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்பவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

Accession No.

Koviloor Digital Library

தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்

ஆமூர் விருந்து

நறும்பூங் கோதை தொடுத்த நாள்சினைக்
குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி
நிலையருங் குட்டம் நோக்கி நெடிதிருந்து
புலவுக்கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கண் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண்பணை
அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை
பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலைவெண் சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்

அடையா வாயில்

எரிமறிந் தன்ன நாவின் இலங்கெயிற்றுக்
கருமறிக் காதின் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப

Koviloor Digital Library

நீறடங்கு தெருவின்அவன் சாறயர் மூதூர்
சேய்த்தும் அன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயில்அவன் அருங்கடை குறுகிச்

இன்னகை ஆயம்

செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த
அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்

ஆணணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த
கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஒடியது உணர்தலும்
அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த

அறிவுமடம் படுதலும் அறிவுநன் குடைமையும்
வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்
பன்மீன் நடுவண் பான்மதி போல
இன்னகை ஆயமொடு இருந்தோற் குறுகிப்

கூடுகொள் இன்னியம்

பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறு சேர்பு ஒழுகிய வகையமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறம் கடுப்பப்

Koviloor Digital Library

புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து
அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்னியம் குரல் குரலாக

புகழ் மொழிகள்

நூல்நெறி மரபின் பண்ணி ஆனாது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்
நீ சில மொழியா அளவை-

விருந்தோம்பல்

—மாசில்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டித்

தரும் பரிசில்

திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி
விறல்வேல் மன்னர் மன்னெயில் முருக்கி
நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்

Koviloor Digital Library

வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி

உருவ வான்மதி ஊர்கொண் டாங்குக்
கூர்உளி பொருத வடுவாழ் நோன்குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி அவிழ்ந்த தோற்றம் போல

உள்ளரக்கு எறிந்த உருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்றாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ

அன்றே விடுக்கும் அவன் பரிசில் —

குறிஞ்சிக் கோமான்

—மென்தோள்
துகிலணி அல்குல் துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில் கலாபம் மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு

எறிந்துஉரும் இறந்த ஏற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே

ஒய்மான் நாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப் படை முற்றிற்று.

Koviloor Digital Library

இலக்கியச் சுவை

இலக்கியம் தரும் இன்பம் ஈடு இணையற்றது. அதனைக் கம்பர், 'செஞ்சொற் கவி இன்பம்' என்று குறிப்பிடுகின்றார். அது நவில்தொறும் பெருகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் (குறல்:783). அந்த இன்பத்தை நுகர்வோரைச் 'சொற்கொண்டே பாவின் சுவை அறிவார்' என்று ஒரு புலவர் பாராட்டுகின்றார். அதனை அறியாதவரைச் 'செவியிற்' சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்' என்று திருவள்ளுவர் கடிந்து உரைக்கின்றார். (குறல்:413).

இலக்கியச் சுவை இப்படிப் பட்டது என்று கூற இயலாது. அதனை நுகர்ந்தே அறியவேண்டும். இருப்பினும் புலவர்கள் அச் சுவையின் தன்மையை உணர்த்த முயன்றுள்ளனர். சிறந்த பாட்டைத் 'தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும்' என்றும்; 'பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, உவட்டாமல் இனிக்கும்,' என்றும் பாராட்டியுள்ளனர். தீஞ்சுவைக் காவியம்,

'கள்ளையும் தீயையும் சேர்த்து–நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துச்'

செய்திருப்பதாய்த் தோன்றுகிறது என்று பாரதியார் பாடுகின்றார். 'தமிழே', நீ ஓர் பூக்காடு; நான் ஒரு தும்பி'

Koviloor Digital Library

—என்று பாடி, இலக்கியச் சுவையின் தன்மையை வெளிப்படுத்துகின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

இலக்கியத்தைச் சுவைத்தோர் பாட்டில் உள்ள சொற்களில் தோய்ந்து மகிழ்ந்தனர்; பாட்டில் அமைந்து கிடக்கும் ஓசைதரும் இன்பத்தில் திளைத்தனர்; கற்பனை வளத்தில் மூழ்கினர்; உவமை நயத்தில் ஈடுபட்டனர்; பாட்டு இயற்றிய புலவர் கண்ட காட்சியைக் கண்டு களித்தனர்.

இலக்கியத்தை இவ்வாறெல்லாம் சுவைத்தவர்களைப் பின்பற்றிச் சிறுபாணாற்றுப்படையின் சுவையை நாமும் நுகர்வோம்.

சொல் விருந்து

புலவர்கள் சொற்களைக் கையாளுவதில் வல்லவர்கள். அவர்கள் எண்ணும் கருத்தைச் சுமந்து நின்று ஏவல் செய்யச் சொற்கள் காத்துக் கிடக்கின்றன. அவர்கள் வாக்கிலிருந்து வெளிப்படுத்தும்போது எளிய சொற்களும் அரிய பொருளை விளக்கும் ஆற்றலைப் பெறுகின்றன; பழகிய சொற்களும் புதுமையாய்த் தோன்றுகின்றன. இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதிகளைப் போலப், புலவர்கள் எளிய சொற்களையும் உயர்ந்தவையாய் மாற்றி விடுகின்றனர்.

இவற்றை எல்லாம் உணர்ந்த பெரியோர், புலவர்களை 'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்' (புறம்:235) என்றும், 'சொல்லேர் உழவர்' (குறள்:872) என்றும், 'சீரிய கூரிய தீஞ்சொல்வவ்விய கவிஞர்' (கம்ப.) என்றும் கூறியுள்ளனர். கவிமணி,

'மந்திரச் சொல்லாலே – உள்ளம்
மயங்கச் செய்திடுவான்'

என்று கவிஞனைப் புகழ்கின்றார்.

Koviloor Digital Library

நத்தத்தனார் பாட்டில், வளமான செஞ்சொற்கள் உண்டு; கற்போர் நெஞ்சத்தை இனிக்கச் செய்யும் தீஞ் சொற்கள் உண்டு. அன்பு மொழியை, ஈரநன்மொழி (93) என்றும், சிவபெருமானை, ஆலமர் செல்வன் (97) என்றும், தாமரையைத் தெய்வத் தாமரை (73) என்றும் நந்தத்தனார் கூறிச் சொல்விருந்து அளிக்கின்றார். மலரில் உள்ள தேனைக் கள் என்று கூறி, மேலும் அதனை, இளங் கள் என்றும், விளையா இளங் கள் (45) என்றும் அவர் சிறப்பித்து மகிழ்கின்றார்.

ஒவ்வொரு புலவரும் சில சொற்களைத் திரும்பத் திரும்ப எடுத்தாள்வர். அச் சொற்கள் எவ்வாறோ அவர் நெஞ் சத்தில் ஆழப்பதிந்து, அவர் பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி வந்து தலைகாட்டும். நத்தத்தனார் வாக்கில் சில சொற்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆயினும் அவை கற்போர் சுவையைக் கெடுக்காத வரையில் அளவோடு இடம் பெறுகின்றன.

நன்மொழி (93,99), தடக்கை (105, 124) நெடுவேல் (94, 102) நெடுவழி (11, 168) மால்வரை (21, 205), நாகுமுதிர் (51, 108), எழூஉறழ்திணி தோள் (49, 112) தாங்கரு மரபின் (66, 127)—ஆகிய தொடர் மொழிகள் ஒவ்வொன்றும் இருமுறை இடம் பெறுகின்றன.

ஓசை தரும் இன்பம்

கவிஞன் உள்ளத்திலிருந்து வெளிவரும் சொற்கள், இசை அருவியாய்ப் பாடிக் கொண்டே வெளிவருகின்றன. அத்தகைய சொற்களைத் தொல்காப்பியர், இழுமென் மொழிகள் என்று குறிப்பிடுகின்றார். (தொல்-செய்-230). கவிஞனின் உள்ளத்தில் சுரக்கும் உணர்ச்சியின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப, ஓசை பலவேறு வடிவம் பெறு கின்றது. கவிஞனின் படைப்பில் ஓசையும் சிறந்த இடத் தைப் பெறுகின்றது. பாட்டைக் கற்போர், அதில் அமைந்

Koviloor Digital Library

துள்ள ஓசையை அறிந்து பாடும்போதுதான் பாடல் இனிக்கிறது. கவிஞனின் உணர்ச்சியைப்பெற முடிகின்றது. பாட்டுச் செவியால் நுகர வேண்டிய கலை. கம்பர், 'செவி நுகர் கனிகள்' என்று பாடல்களைக் குறிப்பிடுகின்றார். செவி நுகர்கனிகள் பலவற்றை நுகர்ந்து மகிழ்ந்த பாரதியார்,

"ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?"

என்று உலகத்தை வினவுகின்றார்.

தொல்காப்பியர், செய்யுளியலில் பாட்டின் பல்வேறு உறுப்புக்களை ஆராயும்போது, ஓசை பற்றிய உறுப்புக்களாகிய தூக்கு, வண்ணம்-ஆகியவற்றை ஆராய்ந்துள்ளார். தூக்கு என்பது பாட்டிற்குரிய ஓசை 'வண்ணம் என்பது, ஒரு பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்' என்றும், 'சந்த வேறுபாடு' என்றும் பேராசிரியர் விளக்குகின்றார்.

பாட்டிற்குரிய அசையும் சீரும் தளையும் ஓசையின் இயைபு கருதியே பாட்டில் அமைக்கப்படுகின்றன (செய். 10) மோனை, எதுகை, முரண்-போன்ற தொடைகளும் பாட்டின் ஓசை நலம் கருதியே ஆளப்படுகின்றன.

சிறுபாணாற்றுப்படை, அகவற்பாவால் அமைந்துள்ளது. அகவல் ஓசை மிகச் சிறப்பாக அதில் இடம் பெற்றுள்ளது. அகவல் ஓசையே, இடத்திற்கு இடம் பல்வேறு வண்ணங்களைப் பெறுகின்றது.

சிறுபாணாற்றுப்படையில், அடி எதுகையும், பொழிப்பு மோனையும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. விறலியரின் தோற்றப் பொலிவைப் புனையும் பகுதி (13-30), அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. முரண் தொடை, பின்வரும் அடிகளில் இடம் பெற்று இன்பமூட்டுகின்றன.

Koviloor Digital Library

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கி (89).
கரும்புகைச் செந்தீ (156).
பொன்வாய் மணிச் சிரல் (181).
நீலச் செங்கண் சேவல் (184).
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி (142).
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்.
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்.
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்—(231-34)

பொழிப்பு எதுகையும், ஒரூஉ எதுகையும் சில அடிகளில் அமைந்துள்ளன. இவ்வாறு அமைவதைத் தொல்காப்பியர், 'தாவண்ணம்'-என்று குறிப்பிடுகின்றார். இடையிட்டுத் தாவுதலைப் போல, முதற்சீர் மூன்றும் சீருடனோ, நான்காம் சீருடனோ இயைந்து வருவதைப் பின்வரும் அடிகளில் காணலாம்!

குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி, கடையடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்—(137-140)

ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஏந்தல் வண்ணம் அமைவதை,

காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி (110-1).

என்ற அடிகளில் கேட்கலாம்.

ஒழுகிய ஓசை அல்லது ஒழுகுவண்ணம்,

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் (1-4)

Koviloor Digital Library

என்ற அடிகளில் உள்ளது. இவ்வண்ணத்திற்கு மாறுபட்டு, இடை இடையே அற்று அற்று ஒலிப்பது அகைப்பு வண்ண மாகும்.

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும் (207-8)

என்ற அடிகள் இடை இடையே அற்று வந்து, அகைப்பு வண்ணத்தைப் பெற்றுள்ளன.

பாணர் தம் வறுமைத் துன்பத்தைக் கூறும் பகுதி. தாழ்ந்த குரலில்-நெழ்ந்த ஓசையில் கேட்போர் நெஞ்சத்தை இளகச் செய்யும் வகையில் உள்ளது:

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழக்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைந்த
குப்பை வேளை (134-137)

என்ற பகுதியில் பாணரின் துன்பக் குரல் கேட்கின்றது. நல்லியக் கோடனைக் கண்டு பரிசில் பெற்றபின் பாணரின் வறுமை நீங்கிச் செல்வம் சேர்கின்றது; துன்பம் போய் இன்பம் வருகின்றது. செல்வக் களிப்போடு பாணர் பேசும் பேச்சு இது:

தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவணின்றும் வருதும் (141-3)

என்ற அடிகளில் மகிழ்ச்சியின் ஆரவாரம் கேட்கின்றது.

இவ்வாறு, நத்தத்தனுர் உள்ளத்தில் சுரக்கும் உணர்ச்சியின் வன்மை மென்மை; ஏற்றத் தாழ்வு-ஆகியவற்றிற்கு ஏற்ப, அகவல் ஓசையில் பல்வேறு சந்தங்கள் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

சொல்லோவியம்

பலவகை வண்ணக் குழம்புகளைக் கொண்டு, ஓவியம் தீட்டும் ஓவியர்களைப் போலப் புலவர்கள் பலவகைச் சொற்களைக் கொண்டு வண்ண ஓவியம் தீட்டுகின்றனர். புலவர்கள் எழுத்தாளும் சொற்களே பலவகை வண்ணங்களாகப் பயன்பட்டுச் சொல்லோவியங்கள் பிறக்கின்றன. அவர்கள் தாம் காணும் காட்சியைப் பாட்டின் மூலமாகக் கற்போர் நெஞ்சத்தில் ஓவியமாய் எழுதிவிடுகின்றனர்.

நத்தத்தனார் தீட்டியுள்ள சொல்லோவியங்கள் நம் நெஞ்சத்தைக் கவர்கின்றன. 'ஞாயிற்றையும், திங்களையும் இளங்கதிர் ஞாயிறு (243), உருவ வான்மதி (251)-என்ற இரு சொற்றொடர்களால் ஓவியம் தீட்டுகின்றார். மலை, நீர் நிலை ஆகியவற்றின் அழகும் இயல்பும் நன்கு வெளிப்படுமாறு சொற்களை அமைக்கின்றார் அவர். கடவுள் மால்வரை (205), மணிமலை (1), வியன்மலை (170), பனிவரை (240) வான்பொரு நெடுவரை (128), துயல்கழை நெடுங்கோடு (265)-என்ற தொடர்களில் மலையின் தோற்றத்தை அமைத்துக் காட்டுகின்றார். நறுநீர்ப் பொய்கை (68) என்றும், மணிநீர் வைப்பு (152) என்றும் நீர்நிலைகளைப் புனைகின்றார். ஆற்றில் படிந்துள்ள கருமணலையும் கடற்கரையில் உள்ள வெண்மணலையும் முறையே காழக நுணங்கறல் (6) என்றும், கானல் வெண்மணல் (150) என்றும் கூறி அவற்றின் நிறத்தை விளக்குகின்றார்.

பயிர்வகைகள்: கடல் அலைமோதும் இடத்தில் உள்ள தாழையை அலைநீர்த்தாழை (143) என்றும், குப்பை மேட்டில் முளைத்துள்ள வேளைக் கீரையைக் குப்பை வேளை (137) என்றும் நத்தத்தனார் கூறி, அவை நிற்கும் இடத்தையும் ஓவியம் தீட்டுகின்றார். மரங்களைப் புனையும்போது, அவற்றின் உயரமும், கிளைகளின் தன்மையும் வெளிப்படுமாறு. நெடுங்காற் புன்னை (149), குறுங்காற்காஞ்சி (159), நளிச்சினை வேங்கை (23) என்று கூறுகின்றார். நீரில்

Koviloor Digital Library

மூழ்கிக் கிடக்கும் தாமரைத் தண்டில், முட்கள் நிறைந்திருப்பதை முள்ளரைத் தாமரை (183) என்றும், காளான்களின் உட்புறத்தில் துளை இருப்பதைப் புழற் காளாம்பி (134) என்றும் குறிப்பிடுகின்றார். இலை, பூ, கொட்டை ஆகிய சிறு உறுப்புக்களையும் நுண்மையாகக் கண்டு, அவற்றின் அழகில் நத்தத்தனார் ஈடுபட்டுப் பாடுகின்றார். மஞ்சள் மெல்லிலை (44), சிறுவீ முல்லை (89), செம்பொற் கொட்டை (75) என்று அவர் விளக்குகின்றார். மஞ்சள் இலையின் மென்மை, முல்லை அரும்பின் சிறுமை, தாமரைக் கொட்டையின் வண்ணம்-ஆகியவற்றை அவர் உற்று நோக்கி ஓவியம் தீட்டுகின்றார்.

உயிரினங்கள்: உயிரினங்களின் உறுப்பு, தோற்றம், இயல்பு-ஆகியவற்றை உற்று நோக்கிய நத்தத்தனார், அவற்றைத் தம் சொல்லோவியத்தில் அமைக்கின்றார். யானை, குதிரை, ஒட்டகம், எருது-ஆகிய விலங்குகளை அவர் ஓவியம் தீட்டும் திறன் பல இடங்களில் நன்கு வெளிப்படுகின்றது.

பெருகிர்ப் பணைத்தாள் அண்ணல் யானை (200)
கறங்குமணி வால்உளைப் புரவி (92)
ஓங்குநிலை ஒட்டகம் (154)
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகடு (189,90)
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாண்முகப் பாண்டில் (259,60)

என்று நத்தத்தனார், சொல்லோவியங்கள் புனைந்து விலங்குகளைக் காட்டுகின்றார்.

மீன்கொத்திப் பறவையைப் பொன்வாய்மணிச் சிரல் (187) என்றும், தேன் உண்ணும் கருவண்டை நீலச் செங்கண் சேவல் (184) என்றும் நிறங்களை முரண்பட அமைத்து அவ் உயிர்களின் தோற்றப் பொலிவைக் காட்டு

Koviloor Digital Library

கின்றார். நண்டைக் கவைத்தாள் அலவன் (195) என்று சிறப்பிக்கின்றார்.

கலந்த காட்சி: பொருள்களின் எழிலைத் தனித் தனியே சொல்லோவியம் தீட்டிக் காட்டும் நத்தத்தனார், பல்வேறு பொருள்கள் கலந்துள்ள காட்சியையும் வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றார்:

'கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்' (41-46)

என்ற பகுதி, உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து மகிழ வேண்டிய வண்ண ஓவியமாகும். கொழுமீன், வள்ளி தழ்க் கழுநீர், கயவாய் எருமை, பைங்கறி நிவந்தபலா, மஞ்சள் மெல்லிலை ஆகியவை எல்லாம் அழகாக ஓவியம் தீட்டப்படுகின்றன. இப்பகுதியைப் படிக்கும்போது, செங் கழுநீர்ப் பூக்களைத் தின்றுவிட்டுப் பெரிய வாயை உடைய எருமை, தேன் மணக்க அசை போட்டுக்கொண்டு, மிளகுக்கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலில், தன் முதுகை மஞ்சள் மெல்லிலை தடவிக் கொடுக்க, காட்டு மல்லிகைக் கொடிமீது உறங்கும் காட்சி நம் கண்முன் தோன்றுகின்றது.

மக்கள்: நத்தத்தனார், மக்களின் தோற்றத்தையும் மிக அழகாகப் புனைகின்றார். விறல்வேல் மன்னர் (246), கழல் கொடித் தடக்கைக் காரி (95), சாந்துபுலர் திணி தோள் ஆய் (98)- என்று ஆடவரையும்; தொடிக்கை மகடூஉ (192), துளங்கியல் மகளிர் (262)-என்று பெண் டிரையும்; கிளர்பூண் புதல்வர் (61) என்று சிறுவர்களையும் சொல்லோவியம் தீட்டுகின்றார்.

Koviloor Digital Library

மக்கள் குழுமியுள்ள காட்சியையும் அவர் நன்குக ஓவியம் எழுதிக் காட்டுகின்றூர். பாலை நிலத்தில் நடந்து களைத்த விறலியர் மராமரத்தின் வரி நிழலில் தங்கி இருக்கின்றனர். அவர்களுடைய மெல்லிய சிறிய அடியைச் சிறுவர்கள் மெல்லப் பிடித்து விடுகின்றனர். இக்காட்சியை,

சுரன்முதல் மரா அத்த வரிநிழல் அசைஇ... (12)

மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந்து அசைஇ நன்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர (31-33)

என்று நத்தத்தனுர் சொல்லோவியம் தீட்டுகின்றூர்.

ஓவியத்தால் முடியாதவை: ஓவியம் விளக்க முடியாத காட்சியையும் புனைந்து காட்டும் ஆற்றல் பாட்டுக்கு உண்டு. மேலும் பொருளின் சுவை, மணம், வன்மை, மென்மை ஆகியவற்றையும் பாட்டுப் புலப்படுத்தும். இத் தகைய ஆற்றல் ஓவியக் கலைக்கு இல்லை என்னலாம்.

நத்தத்தனுர், ஓவியன் உணர்த்த முடியாத பல நுட்பங்களைத் தம் சொல்லோவியத்தில் தெளிவாக உணர்த்துகின்றூர். கேட்டும் சுவைத்தும், மோந்தும், தொட்டும் உணர வேண்டிய பொருள்களின் தன்மையை-ஓவியனுல் எழுதிக் காட்ட முடியாத இயல்புகளை நத்தத்தனுர் சில சொற்களைக் கொண்டே வெளிப்படுத்துகின்றூர். இன்குரற் சீறியாழ் (35), பழம்படுதேறல் (159), புலவுக்கயல் (181), நன்மென் சீறடி (32) - ஆகிய பொருள்களை அவற்றின் இயல்புகளோடு காட்டுகின்றூர். ஓவியன் சீறியாழை ஓவியம் தீட்டலாம்; ஆனுல் இன்னிசையை எங்ஙனம் எழுதிக் காட்ட முடியும்? இவ்வாறே தேறலையும், கயலையும், சீறடியையும் ஓவியம் வரையலாம்; ஆனுல் தேறலின் சுவை, கயலின் நாற்றம், சீறடியின் மென்மை ஆகியவற்றை எங்ஙனம் ஓவியன் எழுதிக்காட்ட முடியும்?

Koviloor Digital Library

கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. கலைகளுக்கு எல்லாம் தலையாய கலையும் அதுவேயாகும்.

பாவின் நயமெல்லாம்—யானும்
பகரவல் லேனோ?
ஆவின் பாற்சுவையை—நாழி
அளந்து காட்டிடுமோ?

—கவிமணி

Koviloor Digital Library

உவமை நயம்

இலக்கியக் கலைஞர்களின் கலைத்திறனை அறிவதற்கு, அவர்கள் கையாண்ட உவமைகள் சிறந்த அளவுகோலாய் உள்ளன. உவமைகள், புலவர்களின் புலமை மாண்பை வெளிப்படுத்துகின்றன; அவர்கள் கண்ட காட்சியைத் தெளிவாக விளக்குகின்றன; அவர்கள் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி, கற்பனை, இன்பம் ஆகியவற்றைச் சுமந்து வந்து கற்போர் நெஞ்சத்தில் பொதிந்து வைக்கின்றன.

புலவர்கள் கையாளும் உவமைகள், அவர்களின் அறிவு நுட்பத்திற்கும், புலமைத் திறனுக்கும் ஏற்ப அமைகின்றன. அவர்களது கண்ணின் கூர்மை, உள்ளத்தின் தெளிவு, கருத்தின் ஆழம்-ஆகியவற்றிற்கு ஏற்ப, உவமைகள் பல வடிவங்கள் பெறுகின்றன. அவர்கள் வாழ்ந்த இடம், காலம், நாட்டின் வெப்பதட்பநிலை-ஆகியவற்றின் அடிச்சுவடு உவமைகளில் நன்கு பதிகின்றன.

இலக்கியம் தோன்றிய நாள் முதலே, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியும் பிறந்தது என்னலாம். காலந்தோறும் இலக்கிய ஆராய்ச்சி, வெவ்வேறு நோக்கில் வளர்ந்து வந்துள்ளது. தொல்காப்பியர் தம் நூலில்-பொருளதிகாரத்தில் இலக்கிய ஆராய்ச்சியைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். உவமை இயலில், உவமை பற்றி ஆராய்ந்து பல முடிவுகளை அவர் வெளியிட்டுள்ளார்.

Koviloor Digital Library

சங்க நூல்களை அறியத் தொல்காப்பியமே துணை புரிகின்றது. ஆதலின், உவமை இயலில் உவமை பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்களைக் கொண்டு, சிறுபாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ள உவமைகளை ஆராய்வோம்.

நால்வகை உவமைகள்

தொல்காப்பியர் தொழில், பயன், வடிவம், வண்ணம் என்னும் நான்கு வகையில் உவமை தோன்றும் என்று கூறியுள்ளார்:

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"
(உவமை: 1)

சிறுபாணாற்றுப் படையில், மேலே கூறிய நால்வகை உவமைகளும் இடம் பெற்றுள்ளன.

நல்லியக்கோடனை, நத்தத்தனார் 'உறுபுலித்துப் பிணையியர் பெருமகன்' (122) என்று குறிப்பிடுகின்றார். 'பெரிய புலி போலும் வலிமை உடையவன்'-என்று கூறி அவனது செயலைச் சிறப்பிக்கின்றார்; செயலின் மூலமாகவே வலிமை வெளிப்படும் ஆதலின், இதனை வினை உவமம் என்னலாம்.

நல்லியக்கோடன், பாணர்களுக்கு நல்கிய தேறல், 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' (237) என்று சிறப்பிக்கப் படுகின்றது. 'பாம்பு வெகுண்டு கடித்தவுடன், நஞ்சு தலைக்கு ஏறி மயக்குவது போல மயக்கும் தேறல்' என்று பாணர்கள் தாம் உண்டு மகிழ்ந்த தேறலைப் புகழ்கின்றனர். இது பயன் உவமமாகும்.

நத்தத்தனார், தாம் கண்ட பொருளின் வடிவத்திற்கு ஏற்ற உவமையைக் கூறுவதில் வல்லவராய் விளங்குகின்றார். யாழின் நரம்புக்குப் பொற் கம்பியையும் (34), கேணி

Koviloor Digital Library

யில் பூத்துள்ள மலரின் இதழ் நுனிக்கு வேலின் நுனியையும் (173), தொடக்கத்தில் பருத்து, வரவரச் சிறுத்து, திரண்டு மகளிரின் முதுகுப் புறத்தில் தொங்கும் மயிர்ப் பின்னலுக்குப் பெண் யானையின் கையினையும் (191), கிளிஞ்சிலின் ஓரத்திற்கு வாளின் ஓரத்தையும் (58) உவமை கூறுகின்றார் கவிஞர். உவமையும் பொருளும் ஒத்து, எண்ணுந்தோறும் இன்பமூட்டுகின்றன.

வண்ணங்களை ஒப்பிட்டு நோக்கும் கூரிய பார்வையும் நத்தத்தனாரிடம் உண்டு. சீறி யாழில் பத்தரின் மேல் மூடியிருக்கும் தோலின் செந்நிறத்திற்கு, குமிழம் பழத்தின் நிறத்தை உவமையாகக் கூறுகின்றார் அவர் (224, 5). காட்டில் பழுக்கும் குமிழம் பழத்தின் மேல் ஓடு, கருஞ் சிவப்பாய்க் கண்ணைக் கவரும் வனப்போடு விளங்குகின்றது. யாழின் பத்தரை மூடியுள்ள போர்வையை இன்று காண நமக்கு வாய்ப்பு இல்லை. எனினும் உவமையால் பொருளை உய்த்துணர முடிகின்றது.

செவ்வண்ணத்தை மற்றோர் இடத்திலும் சிறப்பாக ஒப்பிட்டு நம்மை மகிழ வைக்கின்றார் புலவர். நல்லியக் கோடன், பாணர்களுக்குப் பரிசிலாக வழங்கிய தேரைப் புகழும்போது, தேர்த்தட்டின் வெளிப்புறம் மறையுமாறு மூடப்பட்ட பலகையின் நிறத்திற்குச் சிறப்பான உவமை கூறுகின்றார். அப் பலகை சாதிலிங்கத்தை உருக்கி வார்த்து நிறம் ஊட்டப்பட்டுள்ளது. சாதிலிங்கம் பூசிய பலகையின் வண்ணத்திற்கு, மலர்ந்து முள் முருக்கம் பூங் கொத்தின் வண்ணத்தை உவமையாகக் கூறுகின்றார். (254-6).

செவ்வண்ணம் உவமையால் பொலிவு பெற்றதைப் போலவே, வெள்ளை நிறமும் சிறப்புப் பெறுகின்றது. நல்லியக்கோடன் வழங்கிய மாசற்ற வெள்ளை நிற ஆடைக்கு, மூங்கிலின் உள்ளே இருக்கும் வெள்ளிய ஆடையை உவமையாகக் கூறுகின்றார். (236). மாசு

Koviloor Digital Library

மறுவற்று, மக்களின் கை படாமல், தூய்மையாகப் பொலியும் மூங்கில் ஆடையின் உயர்வு எண்ணி மகிழத்தக்கதாகும்.

விரவி வந்த உவமைகள்

முன்னர்க் கூறிய நான்கு வகை உவமைகளும் தனித் தனியே வருவதோடு, கலந்தும் வருவதுண்டு.

'விரவியும் வரூஉம் மரபின என்ப'(உவ.2) என்பது தொல்காப்பியர் வாக்கு. விரவி வந்த உவமைகள் சிறுபாணாற்றுப்படையில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

அகில் மரம் ஒன்றை, ஆற்று வெள்ளம் சுமந்து வந்து கடலில் சேர்க்கின்றது. வேரும் கிளையுமாய் ஆற்றில் மிதந்து வரும் அம் மரம் அலைப்புண்டு ஒடிந்து சிதைந்து, கடல் அலையில் புரண்டு மெல்ல மெல்லக் கரையை அடைகின்றது. கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கும் மரத்தை நத்தத்தனார் நோக்குகின்றார். அம் மரத்தின் தோற்றம் உறங்குகின்ற ஒட்டகத்தை அவருக்கு நினைவூட்டுகின்றது. நீண்ட கழுத்தை ஒரு பக்கம் சாய்த்து, மெலிந்த கால்களை மடக்கிக் கொண்டு மேடு பள்ளமான திமிலோடு ஓய்ந்து உறங்கும் ஒட்டகம், அம் மரத்திற்கு ஏற்ற உவமை என்று உணர்கின்றார் கவிஞர். நீரில் மிதந்து, செம்மண் படிந்து, சாக்காடு பட்டு, வேரும் கிளையும் சிதைந்து, கரையோரம் ஒதுங்கிக் கிடக்கும் மரம் ஏற்ற உவமையோடு பாட்டில் பின் வருமாறு அமைகின்றது:

> ஓங்குநிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
> வீங்குதிரை கொணர்ந்த விரைமரம் (154-5).

குளத்தில் மலர்ந்துள்ள வெண்டாமரை மலரை நாடி வந்து, பல கருவண்டுகள் மொய்க்கின்றன. இக் காட்சி கவிஞரின் உள்ளத்தைக் கவர்கின்றது. வெண் மலரில்

Koviloor Digital Library

மொய்த்துள்ள கருவண்டுகள், முழு வெண்மதியைச் சேர்ந்துள்ள கரும்பாம்பைக் கவிஞருக்கு நினைவூட்டுகின்றன. அவர்,

முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாள்போது
கொங்குகவர் நீலச் செங்கண் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும் (183-5)

என்று பாடித் தம் கருத்தை வெளியிடுகின்றார்.

நல்லியக்கோடனின், அரண்மனை வாயில் உள்ள கதவு திறந்திருக்கின்றது. ஓங்கி உயர்ந்த மதில், அதன்கண் இருக்கும் பெரிய வாயில், வாயிலில் உள்ள திறந்த கதவு- இவை எல்லாம் புலவரின் கற்பனையைத் தூண்டுகின்றன. 'மேருமலை ஒரு கண்ணை விழித்துப் பார்ப்பது போன்ற அடையாத வாயில்'-என்று தகுந்த உவமையோடு அடையா வாயிலைப் பாடுகின்றார்(206).

பாம்பைக் கையில் பிடித்துக்கொண்டு, துன்புற்ற குரங்கை எங்கேயோ நத்தத்தனார் கண்டிருக்கின்றார். அக் காட்சி ஓர் உவமையாய் வெளிப்படுகின்றது. பாம்பைப் பிடித்த குரங்கு பட்டபாட்டை விரிவாகப் பாட அவருக்கு வாய்ப்பு இல்லை. பாம்பை இறுகப் பிடித்து மூடிய விரல்கள், வளைந்து வளைந்து சுற்றும் பாம்பு, அப் பாம்பு சுற்றிய முழங்கை ஆகியவற்றை மட்டும் உவமையில் வைத்து மகிழ்கின்றார் அவர்.

பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு
(221-2).

என்று யாழின் முன் பகுதிக்கு ஏற்ற உவமை கூறுகின்றார். குரங்குக் கையின் முட்டி, யாழ்த்தண்டின் குவிந்து திரண்ட முன்புறத்திற்கும்; குரங்கின் முழங்கை, தண்டிற்கும்; வளைந்து வளைந்து சுற்றிய பாம்பு, வார்க்கட்டுகளுக்கும் பொருத்தமான உவமைகளாகின்றன.

Koviloor Digital Library

நல்லியக்கோடன் பாணர்களுக்கு வழங்கும் தேர், புலவர் நினைவில் நன்கு இடம் பெற்றுள்ளது. தேர்ச் சக்கரம் சிறந்த உவமைகளோடு புலவர் வாக்கில் பொலிகின்றது.

கூதிர்க் காலத்தில் மழை முகில் அங்கும் இங்கும் விட்டு விட்டு விளங்கும் வானத்தில், வெண்மதி தண் கதிர் பரப்பி மண்டிலமிட்டுத் தோன்றும் தோற்றத்தைப் புலவர், தேர்ச் சக்கரத்திற்கு ஒப்பிட்டு மகிழ்கின்றார் (250-253). அச்சுக் கோக்கும் உறுப்பாகிய குடம், முழுவெண் திங்களுக்கும்; மதி உமிழும் ஒளிக்கதிர்கள், ஆரைக்கால்களுக்கும்; திங்களைச் சூழ்ந்துள்ள மண்டிலம், தேர்ச் சக்கரத்தின் வட்டைக்கும் சிறந்த உவமைகளாகின்றன.

நல்லியக்கோடன், சிரித்து மகிழும் இனியவர் பலர் நடுவே வீற்றிருக்கின்றான். இக் காட்சி திங்கள் சுடர்மீன் கூட்டத்தின் நடுவே விளங்குவதைப் புலவர்க்கு நினைவூட்டுகின்றது.

> பன்மீன் நடுவண் பான்மதி போல
> இன்னகை ஆயமொடு இருந்தோன் (219-20).

என்று அவர் பாடுகின்றார். சிறிதும் பெரிதுமாய் மின்னிப் பொலியும் விண்மீன் கூட்டம், ஒளிபடைத்த கண்ணோடு, வெண்பல் இலங்கச் சிரித்து மகிழும் ஆயத்திற்கு ஏற்ற உவமையாகின்றது. முழுவெண்மதி, அன்பும் பண்பும் நிறைந்து இனியனாய் விளங்கும் நல்லியக்கோடனுக்குப் பொருத்தமான உவமையாகின்றது.

மிகப்பெரிய பொருள் ஒன்றைக் காட்ட அதன் ஒரு பகுதியை மட்டும் எழுதி, அதன் முழு வடிவத்தைக் காண்பவரே உய்த்துணருமாறு அமைப்பது ஓவியர்கள் கையாளும் மரபு. இம்மரபை இலக்கியக் கலைஞர்களும் கையாளுகின்றனர். நத்தத்தனார், பேயின் வடிவத்தை விளக்க அதன் உறுப்புக்கள் சிலவற்றை மட்டும் காட்டிப்

Koviloor Digital Library

பேயின் தோற்றத்தை நாமே உய்த்துணருமாறு அமைக்கின்றார். அவர் பேய்மகளை,

எரிமறிந் தன்ன நாவின், இலங்குஎயிற்றுக்
கருமறிக் காதின், கவையடிப் பேய்மகள் (196-7)

என்று குறிப்பிடுகின்றார். மேல் நோக்கி எரிகின்ற பெருந்தீ சாய்ந்ததைப்போல, பேயின் நாக்கு உள்ளதாம். கொழுந்துவிட்டு எரியும் பெருந்தீ நுனியில் குருகியும், கீழே வர வர அகன்றும் இருக்கும். பெருந்தீ, கீழ்நோக்கிச் சாய்ந்தது போல - என்ற உவமை, பேயின் பெரிய - சிவந்த கீழே தொங்குகின்ற நாக்கிற்கு ஏற்றதாய் உள்ளது. அதன் காதுகள் வெள்ளாட்டின் காதுகள்போல நீண்டு, கறுத்துத் தொங்குகின்றனவாம். இவற்றோடு பளபளக்கும் பல், கிளையாகப் பிரிந்த அடி ஆகியவற்றையும் கூறிப் பேயின் தோற்றத்தை நம் கண்முன் கொண்டுவருகின்றார் கவிஞர்.

உவமையால் விளக்கப்பட்ட பேய், வேறொரு பொருளை விளக்க உவமையாகின்றது. நல்லியக்கோடனது தலைநகரின் தெருவில், போர்க் களிறு உலவுகின்றது. அதன் கால்கள், போர்க் களத்தில் பகைவரை மிதித்துச் சிவந்திருக்கின்றன. காலில் உள்ள நகங்களிலும் குருதி படிந்துள்ளது. இத் தோற்றம் கவிஞரின் கற்பனையைத் தூண்டுகின்றது. பச்சை ஊனைத் தின்ற பேய், தன் அகன்ற வாயைத் திறந்து, குருதி படிந்த பெரும் பற்கள் தெரியும்படி சிரிப்பது போல-குருதி படிந்த, பெரிய நகங்களை உடைய, யானையின் அடிபோலத் தோன்றுகின்றது என்று கவிஞர் பாடுகின்றார் :

'...............இலங்கு எயிற்று(ப்)
................பேய்மகள்
நிணன்உண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணன்உகைத்துச் சிவந்த பேருகிர்ப்
[பணைத்தாள்
அண்ணல் யானை.' (196-200)

PGL 2185

Koviloor Digital Library

என்ற அடிகள் கற்போர் நெஞ்சத்திற்கு உவகை ஊட்டு கின்றன.

பொருளையே உவமம் செய்தல்

உவமை, பொருளைவிட, உயர்ந்ததாய் இருக்க வேண்டும். அவ்வாறு உவமை இருந்தால்தான், கற்போர்க் குப் பொருளின் தன்மை தெளிவாக விளங்கும். இதனால் தான் தொல்காப்பியர்,

> உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை
>
> (உவமை: 3)

என்று உவமையைப் பற்றிக் கூறியுள்ளார்.

உவமையின் சிறப்பை நன்கு உணர்ந்த புலவர்கள், பொருளையே உவமையாக்கிச் சிறப்பித்தனர். அவ்வாறு செய்யினும் அது சிறந்த உவமையாகவே கருதப்படும்.

> பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
> மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும்
>
> (உவமை: 9)

என்பது தொல்காப்பியர் கருத்து. இதற்கு உரை எழுதும் போது பேராசிரியர், சிறுபாணாற்றுப்படையிலிருந்து இரண்டு அடிகளை (72-3) எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குகின்றார்.

உமணரின் உப்பு வண்டியில் செல்லும் மந்தியை, மகா ரன்ன மந்தி (56) என்றும்; முத்தை, பெண்களின் பற்களை ஒத்த முத்து (57) என்றும் நத்தத்தனார் கூறிப் பொருளையே உவமையாக்கியுள்ளார்.

இயற்கைக் காட்சிகளைப் பாடும் இடங்களில், அடி தோறும் விழுமிய உவமைகளைக் கூறிக் கற்போர் உள்ளத் தில், அக் காட்சி என்றும் நின்று நிலவுமாறு செய்கின்றார். மருத நிலக் காட்சியைப் பாடும்போது பொருளையே

Koviloor Digital Library

உவமையாக்கி இன்புறுகின்றார். ஓவியம் போன்ற (பொய்கைத்) துறை, இந்திர கோபப் பூச்சி போன்ற (கடம்ப மலர் சிந்திய) செந்தாது, நகில் போன்ற (தாமரை) மொட்டு, முகம் போன்ற (தாமரை) மலர், அரக்கு ஊட்டிய அங்கை போன்ற (தாமரை மலரின்) இதழ் (70-74)-என்று அடி தோறும் நத்தத்தனார் உவமைகள் கூறுகின்றார்.

பொருளையே உவமையாக்கி மகிழும் நத்தத்தனார், நெய்தல் நிலக் காட்சியைப் பாடும்போது வேறு ஒரு புதுமையைக் கையாளுகின்றார். பொருளையும் உவமையையும் ஒன்றாகவே ஆக்கிவிடுகின்றார். 'தாழை, அன்னம் பூத்துள்ளது. செருந்தி பூத்து, பொன் என்று மருட்டுகின்றது. முண்டகம், கதிர்மணியைக் கழற்றுகின்றது: புன்னை, நித்திலம் வைத்துள்ளது'-என்று கூறித் திளைக்கின்றார் (146-151).

முல்லை நிலக் காட்சியைப் பாடும்போதும் நத்தத்தனார் பொருளையும் உவமையையும் ஒன்றாக ஆக்கிவிடுகின்றார். "முல்லை நிலத்தில், அவரைக் கொடி பவழம் கோத்து விளங்குகின்றது. காயா, மயிலின் கழுத்தாக மலர்ந்துள்ளது. முசுண்டைக் கொடி, (பனை ஓலையால் செய்த) கொட்டம் கொண்டுள்ளது. காந்தளின் பூக்குலை, கை விரல்களைப் பூத்துள்ளது" என்று பாடி மகிழ்கின்றார் அவர் (164-169).

குறிஞ்சி நிலக் காட்சியில் உள்ள ஓர் உவமை கற்கும் தோறும் புதிய உணர்ச்சி ஊட்டி மகிழ்விக்கின்றது. நல்லியக்கோடனுக்குரிய மலையின் உச்சியில் வெண்முகில் அங்கும் இங்கும் விட்டுவிட்டுத் தோன்றி, கவிந்தும் குவிந்தும் உலவுகின்றது. முகிலைக் கண்டதும் தோகை மயில்கள் மகிழ்கின்றன; தம் நீலமணித் தோகையை மஞ்சிடையே பரப்பி ஆடுகின்றன. இக் காட்சி,

Koviloor Digital Library

நத்தத்தனுரின் புலமைக்கு விருந்தளித்து, சிறந்த உவமை யோடு கவிதையாய் வெளிப்படுகின்றது:

......துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில் கலாபம் மஞ்சிடைப் பரப்பி,
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோடு
(262-65)

என்பதே அக் கவிதை. மகளிர், தம் கூந்தலுக்கு அகில் புகையூட்ட விரிந்த அழகிய மெல்லிய கூந்தலைப்போல'— என்ற உவமை எண்ணி மகிழத்தக்கது. மகளிர் மயிலுக்கு உவமையாகின்றனர். விரிந்த கருங்குழல், மயிலின் தோகைக்கும்; அகிற்புகை, மஞ்சிற்கும் பொருத்தமான உவமைகளாகின்றன.

பொருளையே உவமையாக்கிப் பாடுவது நத்தத்தனுரின் தனிப் பண்பாக உள்ளது. ஒரே வகையான உவமைகளை இலக்கியங்களில் கற்றுக் களைத்தவர்களுக்கு, நத்தத்தனுர் கூறும் இவ்வுவமைகள் புதியவையாய்த் தோன்றிச் சுவை யூட்டும்.

மாலை உவமம்

பொருளையே உவமையாக்கிப் பாடுவதில் தனி ஆர்வம் காட்டும் நத்தத்தனுர், சீறியாழ்ப் பாணர்களுடன் வரும் விறலியரின் தோற்றப் பொலிவைப் பாடும்போதும், தமது ஆர்வத்தைக் காட்டுகின்ருர்; பொருளையே உவமையாக்கி உவக்கின்ருர். உவமைகள் மாலை போலத் தொடர்ச்சியாய் ஒன்றன்பின் ஒன்ருய் அமைந்து இன்பமூட்டுகின்றன.

ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண்டு அருளி
நெய்கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில்மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்

Koviloor Digital Library

உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ
வயங்கிழை உலறிய அடியின்; அடிதொடர்ந்து
ஈர்ந்து நிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துடன் செறிந்த குறங்கின்; குறங்கென
மால்வரை ஒழுகிய வாழை; வாழைப்
பூஎனப் பொலிந்த ஓதி; ஓதி
நளிச்சினை வேங்கை நாள்மலர் நச்சி
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின்; சுணங்கு பிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
பூணகத்து ஒடுங்கிய வெம்முலை; முலைஎன
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இகுதரும் எயிற்றின்; எயிறெனக்
குல்லையம் புறவில் குவிகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்;
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர் (13-31).

என்று விறலியரின் அழகை நத்தத்தனுர் பாடுகின்றூர். இப் பகுதி, கற்றேர் நெஞ்சங்களை எல்லாம் பிணித்து, நினைவில் நிலைத்து நின்றுள்ளது. பேராசிரியர், இப் பகுதியிலிருந்து சில அடிகளை (19-23) எடுத்துக்காட்டி, இவை உவமைக்கு உவமையாக வந்தவை (அடுக்கிய தோற்றம்) அல்ல என்று விளக்கியுள்ளார் (உவமை:38). தண்டியலங்கார உரை யாசிரியர் சில அடிகளை (19-28)ச் சந்தான உவமைக்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார். மேலும், 'இதனை, மாலை உவமம் எனினும் அமையும்' என்றும் கூறியுள்ளார் (பொருள் அணி-13). மாறன் அலங்கார உரையாசிரியர் அந்தாதி உவமைக்குச் சில அடிகளை (19-22)க் காட்டி யுள்ளார்.

விறலியரைப் புனையும் பத்தொன்பது அடிகளில் பதின் மூன்று உவமைகளைப் புலவர் அமைத்துள்ளார். அவற்றுள் ஐந்து, பொருளே உவமையாகி வந்தவையாய் உள்ளன. நத்தத்தனுர், பொருள் உவமையை வென்று விளங்குவதை

Koviloor Digital Library

எக்களிப்போடு பாடுகின்ருர். இப் பகுதியில் உள்ள உவமைகள் பலமுறை எண்ணி எண்ணி இன்புறத் தக்கவை. உரையாலோ, விளக்கத்தாலோ புலவர் கருத்தைத் திரட்டித்தர முடியாத பகுதி இது. இதில் உள்ள கற்பனையும் உணர்ச்சியும் என்றும் புதியனவாகவே இருக்கும்; கற்கும் தோறும் புதுப்புது வகையாய் இனித்துப் புலமைக்கு விருந்து நல்கும். பொன்னும் மணியும் முத்தும் பவழமும் ஓரிடத்தில் குவிந்து கிடந்து, காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, தணியாத வேட்கையை உண்டாக்குவது போல, இவ்வுவமைக் குவியல் கற்போரைப் பேரின்பத்தில் ஆழ்த்துகின்றது.

உருவகம்

வானத்திலிருந்து உலகத்தைக் காண்பது பேரின்பம் தரும் காட்சியாகும். கற்பனைச் சிறகுகொண்டு பறந்து, இலக்கிய வானத்தில் நின்று நத்தத்தனுர் இவ்வுலகத்தைக் காண்கின்ருர். நிலம், மலை, ஆறு, காடு - ஆகியவற்றை நோக்குகின்ருர். அக் காட்சி விழுமிய உணர்ச்சியூட்டி அழகுக் கவிதையாய்க் கருக் கொள்கின்றது.

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் குயில்குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்பு விரித்தன்ன காழக நுணங்கறல் (1-6).

என்பதே அக் கவிதை.

மாநில மடந்தைக்கு மூங்கிலே தோள்; மலையே மார்பு. அவள் மார்பில் கிடந்து அசையும் (முத்து) மாலை போலக் கானுறு விளங்குகின்றது. கானுற்றங் கரையில் உள்ள பூம்பொழிலில், குயில்கள் கோதி உதிர்ந்த நறுமலர்களை, நிலமடந்தை சூடி, நெறிப்புள்ள கூந்தலை விரித்தாற்

Koviloor Digital Library

போலக் கரிய நுண்ணிய மணல் காணுற்றில் விளங்கு கின்றது—இவற்றை நிலமடந்தையை உருவகம் செய்து மகிழ்கின்ருர் நத்தத்தனுர்.

குறிப்பு உருவகம்

உவமை கொள்ளும் பல்வேறு வடிவங்களில் உருவக மும் ஒன்று. உருவகம் தன் வடிவத்தில் சுருங்கி ஒரு பொருள் (ஏகதேச) உருவகம் ஆகின்றது. ஒரு பொருள் உருவகமும் குறுகிக் குறுகி இரண்டொரு சொற்களில்மட்டும் தன் வடிவத்தைக் காட்டி நிற்பதுண்டு. அதனைப் பரிமேலழகர் 'குறிப்பு உருவகம்' என்று கூறுகின்ருர் (குறள்: 1030)

சிறுபாணுற்றுப்படையில் கணக்கற்ற குறிப்பு உருவகங் கள் இடம் பெற்றுள்ளன. நுணுகி ஆராய்ந்து, குறிப்பு உருவகத்தில் மறைந்து கிடக்கும் உவமையின் முழு வடிவத் தைக் காணும்போது பேரின்பம் உண்டாகின்றது.

பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத் தடக்கை(124) என்ற அடியில், நல்லியக்கோடனின் வள்ளன்மையைச் சிறப்பிக்கின்ருர் புலவர். கைம்மாறு கருதாது உலகத்திற்கு மழையைப் பொழியும் முகிலைப்போல, நல்லியக்கோடனின் தடக்கை பிடிக்கணத்தை இரவலர்க்கு வழங்குகின்றது-என்ற கருத்தைப் புலவர் ஒரே அடியில் வைத்து விளக்கி யுள்ளார். சிதறும், பெயல் மழை-என்ற சொற்களில் சிறந்த கருத்துப் பொதித்துள்ளது. மழை முதல் தடக்கைக் கும்; உலகம் இரவலர்க்கும்; மழைநீர் பிடிக் கணத்திற்கும் உவமைகளாகி உருத் தெரியாமல் மறைந்து நிற்கின்றன.

சங்க காலத்தில் நான்கு குதிரைகள் பூட்டிய தேர் இருந்தது (பெரும்: 488-9) என்பதைச் சங்க இலக்கியங் கள் குறிப்பிடுகின்றன. பழந் தமிழ் நாட்டில் வாழ்ந்த நத்தத்தனுர், பல குதிரைகள் பூட்டிய தேர் ஒன்றைக் கற்பனை செய்து பார்க்கின்ருர்.

Koviloor Digital Library

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்...
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்
.........நல்லியக் கோடன் (113-6)

என்று நல்லியக்கோடனைப் புகழும்போது, புலவர் செய்த கற்பனை வெளிப்படுகின்றது. மேலே காட்டிய அடிகளில் சிறந்த உவமை ஒன்று மறைந்திருக்கின்றது. பூண்ட, நுகம், தாங்கிய-என்ற மூன்று சொற்களும் அவ்வுவமையை வெளிப்படுத்துகின்றன.

ஈகையாகிய தேரைப் பேகன், பாரி முதலிய வள்ளல்கள் எழுவரும் சேர்ந்து இழுத்தனர். அவர்கள் மாய்ந்த பின் அந்தத் தேர் ஒய்ந்து கிடக்கின்றது. தேரின் நிலையை உணர்ந்த நல்லியக்கோடன் தான் ஒருவனாகவே இருந்து, ஈகைத் தேரின் செந்நுகத்தைத் தாங்கி வலிமையோடு முயன்று இழுக்கின்றான். இவ்வாறு பல சொற்களால் கூற வேண்டிய கருத்தை மூன்று சொற்களில் மட்டும் பொதிந்து வைத்துள்ளார் நத்தத்தனார்.

மக்களிடையே போட்டி, பிணக்கு, போர், வெற்றி தோல்வி-ஆகியவற்றைக் கண்ட நத்தத்தனார் அவற்றை அஃறிணை உயிர்களிடமும், உயிரற்ற பொருள்களிடமும் வைத்து இன்புறுகின்றார். தம் புலமை மாண்பினால் எளிய பொருள்களும் உணர்வும் அறிவும் பெற்றுப் போராடி வெற்றி தோல்விகளை அடைவதாய்ப் படைத்து மொழிகின்றார்.

அல்லி மலர்கள், ஞாயிற்றின் சுடுவெங்கதிர்களுக்கு அஞ்சி, மலர்ச்சியின்றி இருக்கின்றன; தம் பகைவன் வலி குன்றி ஒயும் நிலையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றன. ஞாயிறு மெல்ல மெல்ல மேற்கே சென்று மலையில் மூழ்குகின்றது; அதன் சுடுவெங் கதிர்களும் மறைகின்றன. தமக்கு ஏற்ற மாலைக் காலம் வந்ததைக் கண்டு அல்லி மலர்கள் மலர்கின்றன: தம் பகைவன் மறைந்து விட்டதால் மகிழ்கின்றன. இக் கருத்துக்கள் யாவும் அடங்க,

Koviloor Digital Library

........வியன்மலை மூழ்கிச்
சுடர்கால் மாறிய செவ்வி நோக்கி
........பூத்த கேணி (170-72).

என்று நத்தத்தனார் பாடுகின்றார்.

சேர மன்னன் குட்டுவனின் தோளைக் 'களைய மரத் தோடு மாறுபடும் திண்டிய தோள்' (49) என்றும்; நுளை மகளின் மாசற்ற முகத்தை, மாசுடைய திங்கள் கண்டு, 'இம் முகத்தின் அழகை நாம் பெறவில்லையே!'-என்று ஏங்குவதற்குக் காரணமான மாசில் திருமுகம் (157) என்றும் நத்தந்தனார் கூறுவது மிகவும் சுவையாய் உள்ளது.

நல்லியக்கோடன் பளபளப்பான பொற் கலத்தில் பாணரை உண்ணச் செய்கின்றான். பொற்கலத்தைச் சுற்றிச் சிறிதும் பெரிதுமான தட்டும் கிண்ணமும் காய்கறி யோடு விளங்குகின்றன. பொற்கலமும், அதனைச் சுற்றி யுள்ள தட்டும் கிண்ணமும் பொலியும் இன்பக் காட்சி கவிஞரின் உள்ளத்தைக் கிளறுகின்றது. அக் கிளர்ச்சி யால்,

வாள் நிற விசும்பில் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குபொற் கலம் (242-4)

என்ற கவிதை பிறக்கின்றது. 'எள்ளும்' என்ற சொல், செறிந்த கருத்தோடு விளங்குகின்றது. கோள்மீன்கள் பலவற்றால் சூழப்பட்ட இளங்கதிர்களையுடைய ஞாயிற்றை, சிறிய தட்டும் கிண்ணமும் சூழ இருக்கும் பொற்கலம் எள்ளி நகைக்கின்றதாம், மெலியாரைக் கண்டு வலியார் எள்ளி நகைப்பது போல!

அஃறிணை பொருள்கள் போரிட்டு வெற்றி தோல்விகளை அடைவதாய்ப் பாடுவதில், நத்தத்தனார் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றார். இரும்புப் பூண் கட்டிய உலக்கை கொண்டு

Koviloor Digital Library

குத்தி எடுத்த அரிசி, அந்தப் பூணின் முகத்தைத் தேய்த்து விட்டதாகக் கூறுகின்றார் (193, 4). இடி, நெடிய மலையுடன் போரிட்டு, அதன் தலையை இடித்துச் சென்றதாக வுரைக்கின்றார் (266). ஆற்றில் பெருகி வரும் நீர் கரையோடு போரிடுகிறது-என்ற கருத்தைப் 'பொருபுனல்' (188) என்ற சிறு தொடரால் வெளிப்படுத்துகின்றார். கானாற்றில் விரைந்து வரும் புதுவெள்ளம், கரையைக் கொன்று கானாற்றையும் துன்புறுத்துகின்றது என்ற கருத்து,

'செம்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
கொல்கரை' (3, 4)

என்ற அடியில் அமைந்துள்ளது. நுணவ மரக் கட்டையால், உளி கொண்டு செய்த நெட்டி மாலையை,

......நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி அயில்உளி பொருத
......செய்பூங் கண்ணி (51-2, 54)

என்று சுவைபடக் கூறுகின்றார். நுணவ மரக் குறுங்கட்டையுடன், உளி போரிட்டதாகவே கூறுகின்றார். இன்னோரிடத்தில், மரக்கட்டையோடு கூர்உளி போரிட்டு, வடுவை உண்டாக்கியுள்ளதாகவும், அந்த வடு மரக் கட்டையின் உடம்பில் என்றும் வாழ்வதாகவும் பாடுகின்றார்;

கூர்உளி பொருத வடுவாள் நோன்குறடு (252,)

என்ற அடியில் அக் கருத்து உள்ளது.

நக்கீரனார் பாட்டில், இன்னும் பல்வேறு வகையான குறிப்பு உருவகங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றை இங்கே காண்போம்:

சங்க கால மக்கள், ஊர்ப்புறங்களில் இருந்த மந்தை வெளியில், ஆணிரைகள், தினவு போகத் தேய்த்துக்

Koviloor Digital Library

கொள்ள மரக்கட்டைகளை நட்டு வைத்தனர். அம் மரம், 'ஆதீண்டுகுற்றி' எனப்பட்டது. ஆதீண்டுகுற்றியையும் அதன்மீது ஆக்கள் உராய்வதையும் கண்ட நத்தத்தனார்,

உருமுச் சுவல் சொறியும் தூங்கு எயில் (80, 1)

என்று பாடுகின்றார். ஓங்கி உயர்ந்த மதிலின் உச்சியில், இடியேறு தன் கழுத்தைத் தினவு போகத் தேய்த்துக் கொள்ளுகின்றதாம்!

யானையைக் குன்றுக்கும் மதநீரை அருவிக்கும் உவமை சொல்லிப் பழகிய புலவர் மரபில் வந்த நத்தத்தனார் யானையின் மதநீரை 'யானை அருவி' (200) என்று சுருக்கமாகக் கூறுகின்றார்; யானையைக் குன்று என்றும், மதநீரை அருவி என்றும் சொல்லாமல் சொல்லுகின்றார்.

ஔவை உண்ட நெல்லிக் கனியை, அமிழ்து விளைதீங் கனி (101) என்று நத்தத்தனார் புகழ்கின்றார். நெல்லிக் கனியில் அமிழ்தம் விளைந்ததாம், வயலில் நெல் விளைவது போல!

வளிதுஞ்சு நெடுங்கோடு (106) என்றும், வேனில் நின்ற வெம்பத வழிநாள் (9) என்றும், துனிகூர் எவ்வமொடு துயர் ஆற்றுப் படுப்ப (39) என்றும் நத்தத்தனார் கூறும் பகுதிகள் சுவையானவை. காற்று உறங்குவதாயும், வேனில் நிலைபெற்றுத் தங்கி இருப்பதாயும், துன்பம் (பாணர்களை வள்ளலிடம்) செலுத்துவதாயும் பாடியுள்ள முறை சிறப்பாக உள்ளது.

'வாய்ப்புறம் இரண்டும் பொருந்த மூடிய இரு கிளிஞ்சில்களின் உள்ளே முத்தைப் போட்டு' என்ற கருத்தை 'முத்தம், எருந்தின் வயிற்று அகத்து அடக்கி (58)' என்று நத்தத்தனார் கூறுகின்றார். கிளிஞ்சிலுக்கு வயிறு இருக்கின்றதாம்! உள்ளே குழிந்து, வெளிப்புறம் அகன்று, மேடாய்ப் பருத்து இருக்கும் பகுதியை வயிறு என்று கூறுவது பொருத்தம் தானே!

Koviloor Digital Library

வேற்படையை 'அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல் (94)' என்று புலவர் கூறுகின்றார். வேல், தன் கண்களை இமைக்கின்றதாம்! அதன் கண்களில் தீ விளங்குகின்றதாம்! போர் மறவன் சினந்து விழித்த கண்களில் தீப்பொறியைக் கண்ட புலவர், பகைவரை மாய்க்கும் வேலும் அம் மறவனைப் போலவே இருப்பதாய்ப் பாடுகின்றார். இன்னோர் இடத்தில், 'கொடிய சினம் மூண்டு எரியும் ஒளி திகழும் நெடிய வேல் (உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்—102) என்று இன்னும் சற்று விளக்கமாகவே பாடுகின்றார் நத்தத்தனார்.

''பத்துப் பாட் டாதிமனம்
பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே''

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

Koviloor Digital Library

நோக்கு

தொல்காப்பியர், பாட்டிற்குரிய உறுப்புக்களுள் ஒன்றாக நோக்கு என்பதைக் குறிப்பிடுகின்றார். அதனை விளக்கும் போது,—

"மாத்திரை முதலா அடி நிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"
—(செய். 100)

என்று அவர் கூறுகின்றார். இதற்கு உரை எழுதிய பேராசிரியர், அகநானூற்றுப் பாடல் ஒன்றை (அகம் 4) எடுத்துக் கொண்டு, நுண் பொருள் காட்டி, நோக்கு என்பதற்கு விளக்கம் தருகின்றார். 'மாத்திரை முதலா அடி நிலை காறும்' நோக்கி இன்புறத்தக்க பகுதி, சிறுபாணாற்றுப்படையில் உண்டு. பேராசிரியரைப் பின்பற்றி நாமும், நுண்பொருள் கண்டு நத்தத்தனாரின் புலமை மாண்பில் திளைப்போம்.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது,
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி:
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்,
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடைஅடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்

Koviloor Digital Library

அழிபசி வருத்தம் வீட; பொழிகவுள்,
தீறுகண் பூட்கை, தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவண் நின்றும் வருதும்.'' (130-143).

என்ற பகுதியில் நோக்கு என்ற உறுப்பு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

புற நோக்கு

நத்தத்தனர், மேலே காட்டிய பகுதியில், பாணர்களின் வறுமை நிலையையும் (130-140) செல்வ நிலையையும் (141-143) அடுத்து அடுத்துக் கூறுகின்றார். கலைஞர் களின் வாழ்க்கையில் காணப்படும் இருவேறு நிலைமை களையும் ஒருங்கு அமைத்துக் காட்டுகின்றார். கலைஞர்களின் வறுமை தீராததாகவோ, மாறாததாகவோ நிலைத்து இருப்பதில்லை என்பதை உணர்த்தவே இங்ஙனம் அமைக் கின்றார்.

செல்வம் வந்தபோது, கலைஞர்கள் தம் பழைய நிலையை மறக்கவில்லை என்பதையும் இங்கே புலவர் புலப் படுத்துகின்றார்; தாம் முன்பு வறுமையால் துன்புற்றதைப் போலத் துன்புறும் ஏழைக் கலைஞர்களைத், தம் செல்வ நிலை காட்டி மருட்டாமல்—தாழ்வு படுத்தாமல், ஊக்கம் ஊட்டு வதையும் குறிப்பிடுகின்றார். நத்தத்தனர் இத்தகைய எண்ணம் கற்போர் உள்ளத்தில் நன்கு பதியும் வகையில் இருவேறு நிலைகளையும் ஒருங்கு அமைத்துக் காட்டுகின்றார்.

இருவேறு நிலைகளையும் உற்றுநோக்கும்போது, நமக்கு மற்றொன்று புலனாகின்றது. வறுமையின் மிகத் தாழ்ந்த நிலையும், செல்வத்தின் மிக உயர்ந்த நிலையும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு இடங்களில், பல்வேறு காலங் களில் பல்வேறு மக்கள் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சி களை, ஒருவர் வாழ்க்கையில் ஓரிடத்தில் ஒரே நேரத்தில் நிகழ்வனவாய்க் காட்டுவது இலக்கிய மரபு. இம் மரபைக்

Koviloor Digital Library

கையாண்டு, நத்தத்தனர் வறுமைக் காட்சியைப் பாடு கின்றார். கண் திறக்காத இளங் குட்டிகளுக்குக் கொடுப்ப தற்குப் பாலின்றித் துன்பக் குரல் எழுப்பும் நாய் முடங்கிக் கிடக்கும் அடுக்களை, மூங்கில் சரிந்து விழும் கூரை, உப்புப் பொரிந்து விழும் பழஞ் சுவர், கறையான்கள் எடுத்த புற்று, புற்று மண்ணில் முளைத்துக் கிடக்கும் காளான்-இத்தனை காட்சிகளையும் ஓரிடத்தில் அமைத்து, வறுமையின் மிகத் தாழ்ந்த நிலையைக் காட்டுகின்றார். அண்ணல் யானை, அணிதேர், புரவி பெற்றுச் செல்வக் களிப்போடு வாழும் வாழ்க்கையின் மிக உயர்ந்த நிலையையும் காட்டுகின்றார். இந்த இரு வேறு நிலையையும் பாணர்களின் வாழ்க்கையில் அமைத்து மகிழ்கின்றார் நத்தத்தனார்.

மேலும் அவர், வறுமையைப் பாடும்போது, நயத்தக்க நாகரிகத்தைக் கைவிடவில்லை; சொல்பவர் நா நாண, கேட்பவர் செவி கூச அக்காட்சியைப் புனையவில்லை. செல்வத்தைப் பாடும்போதும் பண்போடு பாடுகின்றார். செல்வக் களிப்பால் பண்பிழந்து, அறிவு மயங்கித் தாழ்ந்து கிடக்கும் நிலையையோ, மற்றவரை ஏவல்கொண்டு செருக்கி வாழும் புன்மையையோ அவர் பாடவில்லை இரு வேறு நிலையையும் நாகரிகமாகப் பாடி நம்மை மகிழ்விக் கின்றார்.

அக நோக்கு

இதுவரை, பாட்டை மேம்போக்காகக் கண்டு மகிழ்ந் தோம். இனிச் சொல்லழகிலும், பொருள் ஆழத்திலும் ஈடு பட்டு, நத்தத்தனாரின் புலமை மாண்பில் திளைப்போம்.

பாணரின் வறுமையை அவர் இரு கூறுகக் காட்டு கின்றார். ஒன்று புறத்தோற்றம்; மற்றொன்று அக நிகழ்ச்சி. புறத்தோற்றம் பாணரிடம் பொருள் இன்மையைக் காட்டு கின்றது. அக நிகழ்ச்சி அவர்கள் உள்ளத்தில் தோன்றும் துன்ப உணர்வை வெளிப்படுத்துகின்றது. புறத் தோற்

Koviloor Digital Library

றத்தை எல்லோருக்கும் தெளிவாகக் காட்டி, அக நிகழ்ச்சியை உற்று நோக்கி உணருமாறு நுட்பமாக அமைத்துள்ளார்.

புறத்தோற்றம்

வீட்டுக் கூரையில் உள்ள மூங்கில்கள் சரிந்துவிழுந்து கிடக்கின்றன. பழைய சுவர் உப்புப் பொரிந்து பிளந்து கிடக்கின்றது. அந்தச் சுவரையும் கறையான் கூட்டம் குடைந்து மண்ணைத் தள்ளுகின்றது. அந்த மண்ணில் காளான் பூத்திருக்கிறது. இக் காட்சிகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல, அடுப்பங்கரை உள்ளது. குட்டி போட்ட நாய் அங்கே முடங்கிக் கிடக்கின்றது: கண்களைத் திறக்காத-சாய்ந்த காதுகளை உடைய இளங் குட்டிகள் அந்நாயைச் சூழ்ந்து கிடக்கின்றன. தாயின் முலையைப் பசியோடு இருக்கும் இளங் குட்டிகள் கவர்கின்றன. அந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், நாய் தானே குரைக்கின்றது; துன்பக் குரல் எழுப்புகின்றது.

வறுமைக் காட்சியை இதனினும் உருக்கமாக எவ்வாறு புனைய முடியும்?

> ''திறவாக் கண்ண சாய்செவிக் குருளை!' (130)

என்ற தொடர் நாய்க்குட்டிகளின் தோற்றத்தைக் காட்டும் சிறந்த ஓவியமாக உள்ளது. இளங் குட்டிகளின் இயல்பையும் தோற்றத்தையும் புலவர் உற்று நோக்கியுள்ளார். மேலும் இத்தொடர், அக் குட்டிகள் பிறந்து இரண்டொரு நாட்களே ஆகின்றன என்பதை உணர்த்துகின்றது. அந்த இளங் குட்டிகள் பசியோடு தாயின் மார்பைக் கவர்கின்றன. அங்கே பால் இல்லை! அது குட்டிகளுக்கு எப்படித் தெரியும்? பால் வாய்க்கு வராததால், மேலும் மேலும் முயன்று பற்றி இழுக்கின்றன. குட்டிகள் தரும் துன்பத்தை தாயால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால், தானே குரைக்கின்றது. குட்டிகளை வெறுக்கவும் அதனால்

Koviloor Digital Library

முடியவில்லை. நாயானாலும் தாய் அன்றோ? ஈன்ற உடன் தன் குட்டிகளை அருகே அழைத்துப் பால் ஊட்டவேண்டிய தாய்—அவை பால் உண்ணும்போது மகிழ வேண்டிய தாய், இளங் குட்டிகள் தரும் துன்பத்தினை ஆற்றாது தானே குரைக்கின்றது. இக் கருத்துக்களை எல்லாம்,

> ‘கறவாப் பால்முலை கவர்தல்? நோனாது
> புனிற்று நாய் குரைக்கும்’ (131-2).

என்ற அடிகள் வெளியிடுகின்றன.

நாய் உணவின்றி மெலிந்ததால் பால் இல்லை. ஈன்ற அணிமையிலேயே பால் இல்லை. வெளியே சென்று உணவு தேடவும் அதனால் இயலாது என்ற கருத்தை, ‘புனிற்று நாய்’ என்ற சொற்கள் தருகின்றன.

அடுப்பங்கரையில் ஆள் நடமாட்டம் இல்லை. அங்கே உணவு சமைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன, பல நாட்கள் ஆள் வழங்காததால், நாய் அவ்விடத்தில் சென்று குட்டி போட்டது. இத்தகைய அடுக்களையைப் ‘புல்லென் அட்டில்’-என்ற சொற்கள் உணர்த்துகின்றன. உணவு சமைக்கும் அடுக்களையில் படுத்துக் கிடந்தபோதும், நாய்க்குச் சிறிது உணவும் கிடைக்கவில்லை. அத்தகைய கொடிய வறுமை அங்கே குடிகொண்டுள்ளது.

அக நிகழ்ச்சி

பொருள் இல்லாத நிலையிலும் மனம்தளராதவர் உண்டு. தம் வறுமை நிலையைப் பிறர் நிலையோடு ஒப்பிட்டு, தம் தாழ்வையும் பிறர் உயர்வையும் உணர்ந்து வருந்தும் நுண்ணிய உணர்ச்சி எல்லோருக்கும் அமைவதில்லை. தம் வறுமை நிலையை உணராமலேயே கவலையின்றி வாழ்பவர் உண்டு. ஆனால், பாணர்கள் தம் வறுமை நிலையை உணர்கின்றனர்; உலகத்தின் கண்களுக்கு அஞ்சுகின்றனர். பாணர்கள் தம் வறுமை நிலையை மறைக்க முயல்கின்றன

Koviloor Digital Library

னர்: வறுமையைவிட—வறுமையை உணரும் மான உணர்ச்சியும், அதனை மறைக்க முயலும் முயற்சியுமே அவர்களுக்குத் துன்பம் தருகின்றன. இவற்றையெல்லாம் நத்தத்தனுர் மிக நுட்பமாக வெளியிடுகின்ருர்.

பாணன் மனைவி பசியால் இளைத்துக் காணப்படு கின்ருள். அவள் வயிறு ஒட்டிக்கிடக்கின்றது. அவள் கையில் வளையல்களைத் தவிர வேறு அணிகள் இல்லை. கைவிரல் களில் நகங்கள் வளர்ந்து கிடக்கின்றன. அவற்றைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. அருவருப்புக் கொள்ளவில்லை. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் அல்லவா? அவள் தோற்றத்தை.

'ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் (135, 5).

என்ற சொற்கள் தெளிவாக உணர்த்துகின்றன. அவள் குப்பையில் முளைத்துக்கிடந்த வேளைக் கீரையைத் தன் கூரிய நகத்தால் கிள்ளி வந்து, வேக வைக்கின்ருள். அதற்குப் போட உப்பும் இல்லை! உப்பின்றியே குப்பை வேளை வேகின்றது. இந் நிகழ்ச்சியை,

"........கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை" (136,7)

என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

அந்தக் கீரையை உண்ணப் பலர் காத்திருக்கின்றனர். இரும்பேர் ஒக்கல் - என்ற சொற்கள் அவர்களைக் குறிப்பிடு கின்றன. உண்ணத் தொடங்கும் முன், தம் வறுமை நிலை பிறர் கண்ணில் படாதவாறு, கதவை மூடுகின்றனர். வறுமை உறுதலும் இயல்பு என்று அறியாது புறங்கூறும் மடவோர் காண்பார்களே-என்று நாணி, அவர்கள் கண்ணிலிருந்து தப்பவே அவ்வாறு செய்கின்றனர். 'மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து' (138)-என்ற அடி, பாணரின் மான உணர்ச்சியைப் புலப்படுத்து

Koviloor Digital Library

கின்றது. பின்னர், எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, உப்பின்றி வெந்த வேளைக் கீரையைப் பகிர்ந்து, ஆவலுடன் உண்கின்றனர் என்பதை, 'ஒருங்குடன் மிசையும்'—என்ற சொற்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறு உண்ட போதும் அவர்களுடைய 'அழிபசி வருத்தம்' தீரவில்லை. நல்லியக் கோடனைக் கண்ட பின்னரே அது தீர்ந்தது. பசி என்றும், அழிபசி என்றும், அழிபசி வருத்தம் என்றும் அடுக்கி வந்துள்ள அமைப்பு எண்ணி மகிழத்தக்கது. அத்தகைய அழிபசி வருத்தம் தீர்ந்து, நல்லியக்கோடனிடமிருந்து பாணர்கள் வருகின்றனர் என்பதை,

> "அழிபசி வருத்தம் விட.........
> யாம் அவணின்றும் வருதும்" (140, 3).

என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

வளம் பெற்ற வாழ்க்கை

நல்லியக்கோடனைக் கண்டபின், பாணர்களின் வாழ்க்கையில், முன்பு நிகழ்ந்தவை எல்லாம் பழங் கதையாய்—கனவாய்ப் போய்விட்டன. இப்போது அவர்கள் யானையும், தேரும் பெற்றுத் தம் ஊருக்குத் திரும்புகின்றனர்.

நல்லியக்கோடன், பாணர்களின் பசியைப் போக்கினான்; வறட்சியைத் தீர்த்தான். தேவையான அளவு சில நாட்கள் உண்டு மகிழ மட்டும் பொருள் தந்து அவன் பாணரை அனுப்பி விடவில்லை. மீண்டும் வறுமை தலை காட்டாதவாறு பெருஞ் செல்வம் நல்கினான்; யானையைத் தந்தான்; தேரைக் கொடுத்தான். அவற்றை மட்டுமா தந்திருப்பான்? தேரை இழுக்கக் குதிரைகளைத் தந்திருப்பான். யானைக்கும். குதிரைக்கும் வேண்டிய உண்டியும் உறையுளும் தந்திருப்பான் இன்றேல், தம் வீட்டில் உள்ள நாய்க்கும் உணவு இல்லாத பாணர்கள் யானைக்கும் குதிரை

Koviloor Digital Library

களுக்கும் நீனிக்கு எங்கே போவார்கள்? காழ்சோர் முது சுவரும், காளான் பூத்த தரையும் உள்ள வீட்டில் வாழும் பாணர்கள் யானையையும், குதிரைகளையும் எங்கே கட்டி வைப்பர்?

யானையும் தேரும் எளிமையானவை அல்ல; மிகுந்த சிறப்புடையவை. யானை, மதநீர் ஒழுகும் கன்னத்தை உடையது; பெருமிதம் உடையது; மணிகள் ஒலிக்கும் பக்கங்களை உடையது; தேர், மிகப் பெரியது.

"........பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தேர்." (140—142).

என்ற அடிகள் எண்ணி மகிழத் தக்கவை. இவற்றை எல்லாம் பாணர்கள், வள்ளலிடம் கேட்டுத் தாழ்ந்து நின்று வாங்கிவரவில்லை. உரிமையோடு 'எய்தி' வருகின்றனர்!

பொருளைத் தந்தவர்கள் தம் பொருளை உயர்ந்ததாகவே மதிப்பர். ஆனால் பொருளைப் பெற்றவர்கள், அதன் மதிப்பைப் போற்றும்போதுதான் அதன் இயல்பு வெளிப்படும். இங்கே பொருள்களைப் பெற்று வந்த பாணர்களே அவற்றின் மேன்மையைக் கூறுகின்றனர். எனவே, அவை உயர்ந்தவை என்பதில் ஐயமில்லை.

தம் வறுமை நிலையைப் பிறர் காணாதவாறு கடையடைத்து மானம் காத்த பாணர்கள், செல்வம் வந்தபோது தாமே தம் பழைய நிலையைத் தம் வாயால் விளக்கமாகக் கூறுகின்றனர். இவர்களின் பண்பு,

"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு." (குறள்:963)

என்ற திருக்குறளை நினைவூட்டுகின்றது.

Koviloor Digital Library

சிறுபாணன் சென்ற வழி

சங்க இலக்கியத்தில், பழந்தமிழ்ப் புலவர்களால் குறிப்பிடப்படும் நாடு, நகர், ஊர், மலை, ஆறு - ஆகிய வற்றை நன்கு அறிந்து, இன்று அவை எங்கெங்கே உள்ளன என்பதைத் தரைப் படத்தில் குறித்து விளக் குவது சிறந்த ஆராய்ச்சிப் பணியாகும். அவ்வாறு செய்யின் தமிழக வரலாற்றை அறிவதில் மிகுதியான ஆர் வமும், பழந்தமிழ் நூற்பயிற்சியில் ஈடுபாடும் மக்க ளிடையே உண்டாகும். பழந்தமிழ் பாடல்கள் குறிப்பிடும் இடங்களில் இன்று வாழும் மக்கள் அப்பாடல்களைப் போற்றிக் கற்பர்.

சிறுபாணாற்றுப்படையுடன் தொடர்புள்ள நாடு, நகர், ஊர் ஆகியவை இன்று எங்கெங்கே உள்ளன என்பதை அறிந்தபின், பாட்டைக் கற்கும்போது அவ்விடங்களைப் பற்றிய பகுதிகள் நம் நெஞ்சத்தில் நன்கு பதிகின்றன. பழந்தமிழ் நாட்டு இடப் பெயர்கள் கி. பி. 1200வரை பெரும்பாலும் மாறுமல் வழங்கின என்னலாம். அக்காலத் திற்கு முற்பட்ட கல்வெட்டுக்களின் துணையால், சிறு பாணாற்றுப்படையுடன் தொடர்புள்ள இடங்களை அறிஞர் பலர் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றை இங்கே விளக்கமாகக் காண்போம்.

'ஒய்மான் நாட்டு நல்லியக்கோடனை, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனுர் பாடிய சிறுபாணாற்றுப்படை_' என்ற குறிப்பு, பாடப்பட்டோர், பாடினேர் ஆகிய இரு

Koviloor Digital Library

வர்க்கும் உரிய நாட்டையும் ஊரையும் உணர்த்துகின்றன. இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனம் வட்டமே முன்பு ஓய்மான் நாடு என்று வழங்கிற்று. இவ் வட்டத்தில் உள்ள மரக்காணம், கிளியனூர், திண்டிவனம் ஆகிய ஊர்க் கோயில்களில் இருக்கும் கல்வெட்டுக்கள் இவ் உண்மையைப் புலப்படுத்துகின்றன. மேலும் இவ் வட்டத்தில் மயிலத்திற்கு அருகே உள்ள ஓமந்தூர் என்பது ஓய்மானூர் என்பதன் திரிபு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

நத்தத்தனார் நல்லியக்கோடனை மாவிலங்கை மன்னருள் சிறந்தவன் என்றும் (120-22), கிடங்கிற் கோமான் என்றும் (160) குறிப்பிடுகின்றார். நல்லியக்கோடனின் முன்னோர் மாவிலங்கை என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும், பின் நல்லியக் கோடன் கிடங்கிலில் தங்கி ஆண்டான் என்றும் சிறுபாணாற்றுப் படையை ஊன்றிக் கற்றால் அறிய முடிகின்றது.

புலவர் நத்தத்தனார் வாழ்ந்த இடத்தை இனிக் காண்போம். இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் வட்டமாகும். இன்று அஃது எடக நாடு என்று மருவி வழங்குகின்றது. அவ்வட்டத்தில் இடைக்கழி நாடு-என்ற பெயருடைய ஊரும் உள்ளது. நல்லூர் என்ற பெயரோடு இன்று அவ் வட்டத்தின் தென் கோடியில் உள்ள ஊரே பண்டைய நல்லூர் என்பது ஆராய்ச்சியாளரின் முடிபாகும்.

சிறுபாணாற்றுப்படையில், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை - ஆகிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை யாவும் ஓய்மான் நாடாகிய திண்டிவனம் வட்டத்தில் உள்ளவையாகும். அவ்வூர்கள் இன்று இருக்கும் இடத்தை இனிக் காண்போம்.

எயிற்பட்டினம்: இஃது ஓய்மான் நாட்டில் கடற்கரையோரமாக நெய்தல் நிலத்தில் இருந்த துறைமுகப்பட்டினமாகும். இப் பட்டினத்தை நத்தத்தனார்,

Koviloor Digital Library

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி,
மணிநீர் வைப்பு, மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் (151-53)

என்று குறிப்பிடுகின்றார். மதில், எயில் என்பன ஒருபொருட் சொற்கள். எயிற்பட்டினம் என்பதை 'மதிலொடு பெயரிய பட்டினம்' என்று குறிப்பிடுகின்றார் புலவர். இப்பட்டினத்தைச் சுற்றிலும் வலிமையான மதிற் சுவர் இருந்தது. ஆதலின் இஃது எயிற்பட்டினம் எனப் பெயர் பெற்றது. 'சோ' என்ற சொல் மதிலைக் குறிக்கும். அதனால் எயிற் பட்டினம் சோபட்டினம் என்றும் வழங்கி வந்தது. தமிழகத்திற்குக் கி. பி. முதல் நூற்றாண்டில் அரபிக் கடல் வழியாய் வந்து, பெரிபுளூஸ் என்ற கடற்பயண நூலை இயற்றிய கிரேக்க ஆசிரியர் இப்பட்டினத்தைச் 'சோ பட்மா' என்று குறிப்பிட்டுள்ளார். சோபட்மா என்பது சோ பட்டினம் என்பதன் திரிபாகும்.

இன்று கடற்கரையோரத்தில் உள்ள மரக்காணத்திற்குக் கிழக்கே 5 கி. மீ. தொலைவில் பழைய எயிற் பட்டினம் இருந்திருக்க வேண்டும் என்றும், அது கடலுள் மூழ்கி இருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மரக்காணத்தில் உள்ள பூமீசுரர் கோயிற் கல்வெட்டு அவர்கள் கருத்திற்கு அரணாக உள்ளது.

வேலூர்: தமிழகத்தில் வேலூர் பல உண்டு. சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுவது உப்பு வேலூர் என்று வழங்கும் வேலூரேயாகும். இது கிளியனூருக்கு வடக்கே கழிவெளி ஏரிக்கரையில் சிற்றூராய் உள்ளது. 'ஓமான் நாட்டு வேலூர்' என்று இவ்வூரைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. நத்தத்தனார்,

'முல்லை சான்ற முல்லையம் புறவின்...
'விறல்வேல் வென்றி வேலூர்' (169-173)

என்று முல்லை நிலத்துடன் இணைத்து வேலூரைப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

ஆமூர்: திண்டிவனம் வட்டத்தில் இன்று நல்லாமூர், சித்தாமூர், கொண்டாமூர் - என்று மூன்று ஆமூர்கள் உள்ளன. அவற்றுள் நல்லாமூரே பழைமையான ஊராகும். அங்கே பழைமைக்குரிய சின்னங்கள் உள்ளன. அவ் வூரைச் சுற்றி மருத நிலமும் அகழியும் இருந்தன என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

மருதம் சான்ற மருதத் தண்பணை
அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின், அவன் ஆமூர் (186-8)

நல்லாமூரே இன்று மருத நிலத்தில் உள்ளது. எனவே, அதுவே சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் ஆமூராக இருக்க வேண்டும்.

கிடங்கில்: இதுவே நல்லியக்கோடனின் தலைநகர மாகும். ஆமூரிலிருந்து இவ்வூர் மிக அண்மையில் உள்ளது என்பதை,

...அவன் சாறயர் மூதூர்
சேய்த்தும் அன்று; சிறிது நணியதுவே (201-2)

என்று நத்தத்தனார் குறிப்பிடுவதால் உணரலாம். கிடங்கில் பல விழாக்கள் நடக்கும் பெருநகராக விளங்கியது. அதன் தெருக்களில் யானைகள் மதநீர் ஒழுக உலவிக் கொண் டிருந்தன. இவற்றை,

அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப
நீறடங்கு தெருவின் அவன் சாறயர் மூதூர் (200-1)

என்ற அடிகளால் உணரலாம். கிடங்கில் என்ற சொல், பழந்தமிழ் நூல்களில் அகழியைக் குறிக்கின்றது. நல்லியக் கோடனின் தலைநகர், அகழியால் சூழப்பட்டுச் சிறப்பாக விளங்கினமையால் அந் நகர் கிடங்கில் எனப்பட்டது. நல்லியக்கோடன் குறிஞ்சிக் கோமான் (267) என்று குறிப் பிடப்படுகிறான்; ஆதலின் கிடங்கில் குறிஞ்சி நிலத்தில்

Koviloor Digital Library

இருப்பது புலனாகும். கிடங்கிலைச் சுற்றிலும் சோலைகள் இருந்தன என்பதைக் 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்' (160) என்று கூறுவதால் அறியலாம். கிடங்கிலைச் சுற்றியிருந்த அகழி, அகழியில் வாழ்ந்த கயல் ஆகியவை பற்றிய வெண்பா ஒன்று யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது (யாப்பருங்கல விருத்தி 1. பக். 350.)

இன்று திண்டிவனம் நகரத்தின் ஒரு பகுதியாக உள்ள 'கிடங்கால்' என்பதே பண்டைய கிடங்கில் ஆகும். அங்கே சிதைந்த அகழியும் இடிந்த கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன. திண்டிவனத்தில் உள்ள திண்டீசுவரர் கோயிற் கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்துகின்றது. பிற்காலத்தில் திண்டீசுவரர் பெயரால் ஏற்பட்ட திண்டீசுவரம் என்ற நகர், திண்டிவனம் என்று மருவி, கிடங்கிலையும் உள்ளடக்கி வளர்ந்து தன் பெயரை நிலைநாட்டிவிட்டது.

மாவிலங்கை: இந் நகர், நல்லியக்கோடனின் முன்னோர் காலத்தில் தலைநகராக விளங்கியது. இந் நகரை,

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை (116-120)

என்று நத்தத்தனார் பாடுகின்றார். "வெள்ளத்தில் மிதந்து வரும் நாகம், அகில், ஆரம் ஆகிய மரங்களைத் தோட்புணையாகக் கொண்டு மகளிர், மாவிலங்கையின் நீர்த்துறையில் நீராடுகின்றனர். பழைய இலங்கை நகரின் பெயரைத் தாங்கியுள்ள பெருமையும், அந்நகர் அமைந்த நல்ல வேலையில் அமைந்த சிறப்பும் மாவிலங்கைக்கு உண்டு"-என்று நத்தத்தனார் கூறியிருப்பதால், ஓய்மான் நாட்டுத் தலைநகரம் கிடங்கிலுக்கு மாறிய பின்னரும் மாவிலங்கை சிறப்புடன் விளங்கிற்று என அறியலாம்.

Koviloor Digital Library

இன்று மாவிலங்கை திண்டிவனத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் வந்தவாசிக்குச் செல்லும் சாலையில் உள்ளது. மேல் மாவிலங்கை, கீழ் மாவிலங்கை என இரண்டு ஊர்கள் அங்கே உள்ளன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டாலமி என்னும் கிரேக்கநிலநூல் ஆசிரியர் மாவிலங்கையை 'மேலங்கே' என்று குறிப்பிட்டுள்ளார்.

பாணர் சென்ற வழி

பாணர்கள் இடைக்கழி நாட்டு நல்லூரிலிருந்து புறப் பட்டதாய்க் கொள்ளவேண்டும். நல்லூரிலிருந்து புறப் பட்ட பாணர்கள், ஓய்மான் நாட்டிற்குள் புகுந்து, கடற் கரையோரமாகத் தெற்கே நடந்து, நெய்தல் நிலக் காட்சி களைக் கண்டு மகிழ்ந்து எயிற்பட்டினத்தை அடைந் தனர். அங்குப் பரதவர் தந்த உணவை உண்டு மகிழ்ந்து அங்கிருந்து புறப்பட்டுத் தென்மேற்காக நடந்து முல்லை நிலத்தை அடைந்தனர். முல்லை நிலத்தில் இருந்த வேலூரில், எயினர் இல்லத்தில் விருந்தினராய்த் தங்கினர். பின் வடமேற்காகச் சென்று மருத நிலத்தை அடைந்து ஆமூரில் உழவரோடு உண்டு மகிழ்ந்தனர். ஆமூருக்கு அருகே தென் மேற்கில் குறிஞ்சி நிலத்தில் இருக்கும் கிடங் கிலை அடைந்து, நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீண்டனர்.

இன்றுள்ள வழிகளில் பல முற்காலத்தில் இருந்திருக்க முடியாது. மரக்காணத்திலிருந்து நேர் மேற்கில் திண்டிவனம் செல்ல இன்று நல்ல சாலை உள்ளது. இச் சாலை அக் காலத்தில் இல்லை. பிற்காலத்திலேதான் ஏற்பட்டது. அன்று இருந்த வழி, வழியில் இருந்த ஊர்கள், அவற்றின் வளம் ஆகியவற்றையே சிறுபாணாற்றுப்படை குறிப்பிடு கின்றது.

சிறுபாணாற்றுப்படையில், பாணர்களிடம் உள்ள நல்லியல்புகளையும், வள்ளலிடம் இருக்கும் உயர்ந்த பண்பு களையும் நந்தத்தனார் புலப்படுத்துகின்றார் பாலும் தேனும்

Koviloor Digital Library

ஒன்றுசேர்ந்து சுவையூட்டுவது போல, இரு வேறிடங்களிலும் உள்ள பண்புகள் ஒன்றுசேர்ந்து அக்கால நாகரிகத்திற்கு அழகு செய்கின்றன. பல நூறு ஆண்டுகளாக வாழ்க்கைக் கலையில் தேர்ந்து விளங்கிப் பண்பட்ட மக்களிடம் மலர்ந்த சீரிய பண்புகளாக அவை உள்ளன.

பாணர்களுடன் வரும் விறலியரை,

'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்'(30-31)

என்று நத்தத்தனூர் அறிமுகப் படுத்துகின்றார். கலையும் அழகும் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமானவை என்று எண்ணும் அளவிற்கு உலக இயல்பு இருந்து வருகிறது. கலை, அழகு, வறுமை ஆகியவை ஒருபுறமிருக்க மற்றொரு புறம் கலை நுகர்ச்சி, அழகு நாட்டம், செல்வச் செழிப்பு-ஆகியவை இருப்பின் ஒழுக்கம், திண்மை, கற்பு-ஆகியவை மக்களிடங் நிலைப்பது அரிது. கலைவன்மையால் சிறந்து, அழகால் மேம்பட்டு, வறுமையால் துன்புறும் விறலியர் கலையை நுகர்ந்து அழகை விரும்பிச் செல்வத்தோடு வாழும் வள்ளலை நாடிச் சென்றபோதும் கற்புடையவராக விளங்குகின்றனர் என்பதை நத்தத்தனூர் குறிப்பிடுகின்றார். விறலியரின் மேன்மையையும் வள்ளலின் உயர்வையும் புலப்படுத்துகின்றார்.

கலைஞன் தன் கலையை முதலில் தானே சுவைத்து இன்புறுகின்றான். அவன் தன் கலையைச் செல்வமாகப் போற்றி உயிராக மதித்து உணர்ச்சியோடு வாழ்கின்றான். எத்தகைய துன்ப நிலையிலும் கலை நெஞ்சம் கற்ற கலையை மறந்து விடுவதில்லை. நத்தத்தனூர், பாலைநெடுவழியில் மராமரத்தின் வரிநிழலில் களைப்பு மிகுதியால் தங்கி இருக்கும்போதும் பாண் மகன், யாழை முறையறிந்து பாடுகின்றான். அதனைக் கேட்டு மகிழ்ந்து பாணர் தலைவன் வறுமைத் துன்பத்தையும் வழி நடையால் ஏற்பட்ட களைப்பையும் மறந்து இன்புறுகின்றான் (35-40).

Koviloor Digital Library

கலைஞன் வறுமையால் துன்புறும்போது, தான் கற்ற கலையை வெறுப்பதுண்டு; ஏன் இதைக் கற்றேன்!' என்று கலங்குவதுண்டு. ஆனால் கலையைக் கைவிடவோ, புறக்கணிக்கவோ அவனால் முடிவதில்லை. அவன் வாழ்வில் வறுமைத் துன்பமும், கலை இன்பமும் போராடும்; போராட்டத்தின் இறுதியில் கலை இன்பமே வெற்றி பெறும். நத்தத்தனார் காட்டும் பாணர்கள் வாழ்விலும் வறுமைத் துன்பத்தைக் கலை இன்பம் வென்று விளங்குகின்றது.

வறுமைத் துன்பத்திலும், தகுதியற்றவரிடம் சென்று பாணர்கள் உதவி பெற விரும்பவில்லை. தம் தகுதியறிந்து உதவும் பண்புள்ளவரையே நாடிச் செல்லுகின்றான். தக்கவரைத் தேடிச் செல்கின்றான்.

வளமான வாழ்வு பெற்று உயர்ந்து விளங்கும் பாணர்களிடம் உள்ள நற்பண்புகளையும் நத்தத்தனார் காட்டத் தவறவில்லை. நல்லியக்கோடனிடம் பரிசு பெற்றுச் செல்வச் செழிப்போடு திரும்பிவரும் பாணர்கள், வறுமையால் வாடி மெலியும் பாணர்களைச் சந்தித்திருக்கின்றனர். அவர்களின் வறுமை நிலைக்கு இரங்குகின்றனர். பாணர் தலைவன் அவர்களிடம் தானே முதலில் பேசித் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்கின்றான். வள்ளலிடம் செல்லுமாறு கூறுகின்றான். வள்ளல் இருக்குமிடத்தைக் கூறி அங்கே செல்லுவதற்குரிய வழிகளைக் கூறுகின்றான். வள்ளலிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைக் கூறுகின்றான். வறுமை நீங்கி வளம் பெறுவதற்குரிய எல்லாவற்றையும் கூறி ஊக்கமூட்டுகின்றான்.

இதுவரை இரவலரிடம் சிறந்த பண்புகளைக் கண்டோம். இனி இரவலரைப் புரக்கும் புரவலனின் இயல்புகளைக் காண்போம்.

கலைச்சுவை

நல்லியக்கோடனின் வீரம், கொடை ஆகியவற்றைப் புகழ்வதோடு நத்தத்தனார், 'பல்லியக் கோடியர் புரவலன்'

Koviloor Digital Library

(126) என்று அவனைப் பாராட்டுகின்றார். கலைஞர்கள் தம் கலைத் திறனை அறிந்து பாராட்டுவோரின் புகழுரையை விட வேறு எந்தப் பரிசையும் பெரிதாக மதிப்பதில்லை. கலைச் சுவை அறியாதார் நல்கும் பொருளைப் பெறும்போது கலைஞர்கள் மனநிறைவு கொள்வதில்லை. நல்லியக் கோடன் கலைச் சுவை மிக்கவன் என்றும் அவனிடம் பரிசு பெறுவதைக் கலைஞர்கள் பெரிதும் விரும்பினர் என்றும் குறிப்பாக உணர்த்துகின்றார் நத்தத்தனார்.

பாணர்கள் நல்லியக்கோடனைப் புகழ்ந்து பாடத் தொடங்குகின்றனர். புகழ் மொழிகள் சில கூறு முன்னரே நல்லியக்கோடன் பரிசு வழங்கிவிடுகின்றான் (235). தன் புகழைத் தனக்கு எதிரே பிறர் புகழும்போது கேட்டு செம்மாந்து இறும்பூது எய்தும் புன்மைப் பண்பு நல்லியக் கோடனிடம் இல்லை. 'சான்றோர் புகழுமுன் நாணுப' (குறுந். 252) என்பது பழந்தமிழ் புலவர்கள் சான்றோர்க்கு அமைத்த இலக்கணமாகும். நத்தத்தனார் நல்லியக்கோட னிடம் தன் புகழ் கேட்க நாணும் தகைமைப் பண்பு இருப்பதைக் குறிப்பிட்டு அவனைச் சான்றோன் என்று கூறாமல் கூறுகின்றார்.

நல்லியக்கோடன் தன்னிடம் வந்த பாணர்களுக்கு வழங்கும் முதற் பரிசு தூய மெல்லிய ஆடையாகும். அந்த ஆடையின் 'மேன்மை', மாசில் 'காம்பு சொலித்தன்ன அறுவை' (236) என்று புகழப்படுகின்றது.

ஒருவனின் வறுமைத் தோற்றத்தை உலகிற்கு எளிதில் உணர்த்துவது அவன் உடுத்திஇருக்கும் ஆடையே யாகும். பாணர்கள் கிழிந்த ஆடை உடுத்தியிருப்பதால் நாணி ஒதுங்குகின்றனர். செல்வச் செழிப்போடு விளங் கும் வள்ளலின்முன் தகாத தோற்றத்தோடு நிற்பதற்கு வருந்துகின்றனர். கலைஞர்களின் உள்ளத்தை மான உணர்ச்சி தாக்கித் துன்புறுத்துவதை வள்ளல் உணர்ந்து கொள்கின்றான். அவர்களுக்கு நல்கும் முதற் பரிசாக

Koviloor Digital Library

உயர்ந்த மெல்லிய ஆடையை நல்குகின்றான். வறுமையை விரட்டி அவர்கள் மானத்தைக் காக்கின்றான். தம் மானத்தைக் காத்த வள்ளலின் பெரும் தகைமையை உணர்ந்து பாணர்கள் போற்றுகின்றனர். தமக்கு ஆடை நல்கிச் சிறப்பித்ததை மறவாமல் முதலில் குறிப்பிடுகின்றனர். (236).

மற்றோர் உயர்ந்த பண்பும் நல்லியக்கோடனிடம் உண்டு. பாணர்களுக்குத் தரவேண்டிய பரிசில்களை எல்லாம் உடனே தந்து அன்றே அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிடுகின்றான். 'அன்றே விடுக்கும் அவன் பரிசில்' (261) என்று அப் பண்பு பெருமையாகக் குறிப்பிடப்படுகின்றது. தன்னைக் காண வருவோர்க்குக் காலம் குறிப்பிடுவது, குறித்த காலத்தில் வரினும் நெடு நேரம் வெளியே காக்க வைப்பது, காணும்போது சுடு சொல் கூறிக் கடுகடுப்பது, பரிசு தரும்போது தான் தரும் பரிசின் பெருமையைத் தானே புகழ்வது, பரிசு பெறுவோன் தன்னிடம் என்றும் நன்றியறிதலோடு நடந்து கொள்ள வேண்டும் என்று இடித்துக் கூறுவது-போன்ற கீழ்மைப் பண்புகள் நல்லியக்கோடனிடம் காண முடியாதவை. அதனால் அச் சான்றோனைப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் நினைக்கின்றோம்.

Koviloor Digital Library

நல்லியக்கோடன்

பத்துப் பாட்டில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக் கோடன். அப் பாடலின் ஆசிரியராகிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் அவனது குலப்பெருமை, தோற்றப் பொலிவு, கொடைச் சிறப்பு, வீரம் ஆகியவற்றைப் பல இடங்களில் கூறியுள்ளார்.

நல்லியக்கோடனின் முன்னோர் மாவிலங்கை நகரில் இருந்து ஆண்டனர். அவர்கள் ஓவியர் குடியைச் சேர்ந்த வர்கள். நல்லியக்கோடன் அக்குடியில் தோன்றிப் புகழோடும், வீரத்தோடும் விளங்கினான்.

நன்மா இலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் (120–122)

என்று அவனை நத்தத்தனார் அறிமுகப்படுத்துகின்றார்.

அவன் தோற்றப்பொலிவு பல இடங்களில் கூறப்பட் டுள்ளது. அரும்பும், தளிரும் விரவிக் கட்டிய மாலையைப் பூண்டு அவன் அழகாக விளங்கினான் (161, 267). அவன் கைகள் நீளமானவை (124). அவன் கால்களில் யானை யைச் செலுத்தியதால் உண்டான தழும்புகள் இருந்தன; வீரக்கழல்கள் விளங்கின (123).

அவனிடம் எல்லோரையும் மகிழ்விக்கும் நற்பண்புகள் பல இருந்தன. அதனால் அவன் பெரும் புகழோடு

Koviloor Digital Library

விளங்கினான் (126, 266). பாரி முதலிய வள்ளல்கள் எழுவரும் இறந்தபின், நல்லியக்கோடன் அவ் வள்ளல்கள் மேற்கொண்டிருந்த ஈகையைத் தான் ஒருவனே மேற் கொண்டு இரவலரைப் புரந்து வந்தான் (112-115)

யாழ்ப்பாணர்களை—அவர்களிலும்
சீறியாழ்ப்பாணர்களை அவன் பெரிதும்
காத்து வந்தான்.

நல்லியக்கோடனை நன்னாகனார் என்னும் புலவர் பாடிய பாட்டு ஒன்று புறநானூற்றில் (176) இடம் பெற்றுள்ளது. அதில்,

பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொன்மலை

என்று நல்லியக்கோடன் புகழப்படுகின்றான். அவனுக்குச் சீறியாழின் இசை மீதும், சிறுபாணர் மீதும் தனிப்பற்று உண்டு என்பது இதனாலும் தெரிகின்றது.

அவன் வாழ்ந்த அரண்மனையின் வாயில் பொருநர்க்கும் புலவர்க்கும், அந்தணர்க்கும் எப்போதும் திறந்திருந்தது (204-6). அரண்மனையின் உள்ளே எளிதில் சென்று காணுமாறு, இனியவர் பலர் நடுவில் அவன் வீற்றிருந்தான் (219-20).

அறிவுமிக்க பெரியோர், நல்லியக்கோடனிடம் செய்ந் நன்றி அறிதல், சிற்றினம் இன்மை, இன்முகம் உடைமை, இனியன் ஆதல் ஆகிய பண்புகள் இருக்கக் கண்டு புகழ்ந்தனர் (207-9). வாள் வீரர்கள் அம் மன்னனிடம், ஆண்மைப் பண்புகள் நிறைந்திருந்ததைக் கண்டு பாராட்டினர். தன் வீரத்தைக் கண்டு அஞ்சி வந்து தன் அடி பணிந்தார்க்கு அருள் செய்தல், கடுஞ்சினம் இல்லாமை, போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கும் தன் வீரர்களோடு சேர்ந்து போரிடுதல், போரில், பகைவர்க்கு ஆற்றாது அழிந்து, பின்வாங்காமல் தன் படையைத் தாங்கி நிற்றல்

Koviloor Digital Library

ஆகிய வீரப் பண்புகளை நல்லியக்கோடனிடம் கண்டு வீரர்கள் போற்றினர் (210-212). எண்ணியதை முடித்தல், மற்றவர்களால் விரும்பப்படுதல், தன்னை விரும்பியவர் உயப்படாமை, தன்னால் அன்பு செய்யப்பட்டவர் நெஞ்சத்தில் நிகழ்வதை உணர்தல் ஆகிய பண்புகள் அவனிடம் இருந்ததாய்க் கூறி மகளிர் புகழ்ந்தனர் (213-215). பரிசில் பெற வந்தவரைக் கவரும் இனிய இயல்புகள் அவனிடம் இருந்தன. கலையறிவு குறைந்த, திறமையற்ற கலைஞர்முன் அறியாமை மேற்கொண்டு இருத்தல், அறிவு மிக்க சான்றோர்முன் பேரறிஞனாய் விளங்குதல், பரிசிலரின் தகுதி அறிதல், தனக்கென எதனையும் வைத்துக் கொள்ளாமல் பிறர்க்குக் கொடுத்தல்-ஆகிய பண்புகளை நல்லியக்கோடனிடம் கண்டபரிசிலர் அவனைப் போற்றினர். (216-218). மேலும் பாணர், ''சான்றோர்க்குக் குவித்த கைகளை உடையவன், வீரர் எறிவதற்குத் திறந்துவைத்த மார்பை உடையவன், குடிமக்களுக்கு நிழல் செய்யும் கோலை உடையவன், பகைவர்க்குத் துன்பம் செய்யும் வேலை உடையவன்" என்று அவனைப் பாராட்டிப் பாடினர் (231-234).

சிறந்த ஆண்மையும் ஊக்கமும் உடையவரே பிறர் துன்பத்தைக்கண்டு இரங்கிப் பொருள் தந்து வள்ளலாக விளங்க முடியும்.

> உள்ளம் இலாதவர் எய்தார், உலகத்து
> வள்ளியம் என்னும் செருக்கு (598)

என்பது திருவள்ளுவர் வாக்கு. நல்லியக்கோடனின் படைத் தலைவர், பகைவர்களை வென்று ஓட்டி, அவர்களின் அரணைத் தகர்த்து, அவ்விடங்களில் பெற்ற பொருளைப் பாணர்க்கு வழங்கினர்; பின்னர்க் கிடைத்த பெருஞ்செல்வத்தைக் கொண்டு வந்து நல்லியக்கோடனிடம் தந்தனர். அச்செல்வத்தை அவன் தனக்கென வைத்துக்கொள்ளாமல், தன்னை நாடிப் பாடி வந்த

Koviloor Digital Library

பாணர்க்கே தந்துவிட்டான் (246-249). வீரமும், ஈரமும் இணைபிரியாதவை என்பதை நல்லியக்கோடன் வாயிலாக உணர்த்துகின்றார் நத்தத்தனார்.

விருந்தோம்பும் பண்பும் நல்லியக்கோடனிடம் சிறப்புற அமைந்திருந்தது. பாணர்கள், தமக்கு அவ் வள்ளல் விருந்தளித்த சிறப்பை,

> விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
> ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி (244-5)

என்று கூறியுள்ளார். "உயர்ந்த கலங்களில் சிறந்த உணவு தந்தான்; விரும்பி உண்ணும் பொருளை அறிந்து பேணினான்; குறையாத விருப்பத்தோடு இருந்தான்; தானே இருந்து உண்பித்தான்"-என்று பாணர்கள் நல்லியக்கோடனின் விருந்தோம்பும் பண்பைப் போற்றினர்.

இத்தனை நற்பண்புகளுக்கும் உறைவிடமான நல்லியக்கோடன் இலக்கிய உலகத்தில் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பான். அவனது பண்புகள் சிறுபாணாற்றுப்படையைக் கற்கும்தோறும் மணம் வீசிக்கொண்டே இருக்கும். காலந்தோறும் மக்கள் நெஞ்சத்தில் அவன் வாழ்ந்துகொண்டே இருப்பான்.

Koviloor Digital Library

இயற்கைக் காட்சி

சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார், நல்லியக் கோடனின் நாட்டுவளத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றார். ஐந்திணைக் காட்சிகள், பாணன் சென்ற வழியின் இனிய தோற்றம். ஓய்மான் நாட்டு ஊர்களைச் சூழ்ந்து இருக்கும் இயற்கை வனப்பு - ஆகியவற்றைப் புலவர் வளமான சொற்களால், இலக்கியச்சுவை சொட்டச் சொட்டக். கற்பனை நயத்தோடு பாடித் திளைக்கின்றார்.

சிறுபாணாற்றுப்படையில் நூற்றுக்கு மேற்பட்ட அடிகள் இயற்கைக் காட்சிகளைப் பற்றியவை. அவற்றை நீக்கி விட்டுப் பார்த்தால், அப் பாடல் இப்போது இருப்பதை விடச் சிறியதாக இருக்கும். இயற்கைக் காட்சியைப் பின்னணியாகக் கொண்டு பாட்டில் பல கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாணர்கள் சந்திக்கும் கொடிய பாலை வழி, மூவேந்தர்க்கும் உரிய வளமான தலைநகரங்கள், ஓய்மான் நாட்டில் உள்ள நெய்தல் நிலத்து எயிற்பட்டினம், முல்லை நிலத்து வேலூர், மருத நிலத்து ஆமூர், குறிஞ்சி நிலத்துக் கிடங்கில், நீர்வளம் மிக்க மாவிலங்கை - ஆகியவை இயற்கைக் காட்சியினால் பொலிவோடு விளங்குகின்றன. மேலும் வள்ளல்கள் எழுவரைச் சிறப்பிக்கும் பகுதியில், இயற்கைக் காட்சிக்குச் சிறப்பான இடம் உண்டு.

நத்தத்தனார் ஐந்திணைக்கும் உரிய இயற்கைக் காட்சிகளைப் பாடி இருப்பினும், நெய்தல் நிலத்துக் காட்சிகளையும், மருதநில வளமுமே சிறப்பாக அமைந்துள்ளன. இன்

Koviloor Digital Library

னும் நுணுகிப் பார்த்தால் மருதநிலக் காட்சிகளே பெருஞ் சிறப்புடன் விளங்குகின்றன என்னலாம். நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கையும் பண்பாடும் தொழிலும் சிறப் பிடம் பெற்ற அளவிற்கு, அங்குள்ள பயிர் வகையும் உயிர் வகையும் பெருமை பெறவில்லை. குறிஞ்சி நிலக் காட்சி யும், முல்லை நிலத் தோற்றமும் பல இனிய உவமைகளின் வலிமையால் அழகு பெறுகின்றன. அந்நிலங்களுக்குரிய பருவம், விலங்கு, புள், மரம், செடி, கொடி-ஆகியவை பற்றிய புனைவுகள் விளக்கமாக இடம் பெறவில்லை.

ஒவ்வொரு புலவரையும் ஏதேனும் ஒருவகை நிலத் தின் எழில் கவர்ந்து இன்பமூட்டுகின்றது. குறிஞ்சிக் காட்சிகளைக் கபிலரும், நெய்தல் வளத்தை அம்மூவனாரும், பாலையின் கொடுமையைப் பெருங்கடுங்கோவும் விருப்பத் தோடு பாடி மகிழ்வதைச் சங்க நூல்களில் காணலாம். நத்தத்தனாரை மருதநில வளமே கவர்ந்துள்ளது.

நத்தத்தனார் சோழர்க்கு உரிய உறத்தை நகரை மருத நிலவளத்தோடு சிறப்பித்துப் பாடுகின்றார். தாமரைக் குளத்தின் கரையில் உள்ள நீர்க் கடம்ப மரம் மாலைபோல் பூத்துக் குலுங்குகின்றது. செந்நிறமான நீர்க் கடம்ப மலரிலிருந்து சிந்தும் மகரந்தப் பொடிகள் தம்பலப் பூச்சி களைப் போலச் சிவந்து தோன்றுகின்றன. குளத்தில் மலர்ந்துள்ள செந்தாமரை மலரின் மெல்லிய இதழ்களின் நடுவில் உள்ள பொன் நிறமான கொட்டை மீது அஞ் சிறைத் தும்பி, தன் இனிய துணையைத் தழுவிக் கொண்டு இசைபாடுகின்றது. இத்தகைய வளமான மருத நிலத்தில் உள்ள உறந்தை என்று புகழ்கின்றார் புலவர் (63-78).

'மாவிலங்கையின் நீர்வளத்தை,
நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறையாடு மகளிர்க்கு தோட்புணை ஆகிய பொருபுனல்'
(116-118).

என்று பாடுகின்றார்.

Koviloor Digital Library

ஆமூரின் மருதநில வளத்தை இவற்றிலும் சிறப்பாகப் பாடுகின்றார். 'தாமரைக் குளத்தின் அருகே உள்ள, பூத்த காஞ்சி மரக் கிளையில் மீன் கொத்திப் பறவை ஒன்று, உறுமீனின் வரவு நோக்கி நெடுநேரம் காத்திருக்கின்றது. உறுமீனைக் கண்டதும் நீரில் விரைந்து பாய்ந்து கொத்தி எடுக்கின்றது. நீரில் பாயும்போது மீன் கொத்தியின் காலில் உள்ள கூரிய நகங்கள் தாமரை இலையைக் கிழிக் கின்றன. அத்தகைய பசிய இலைகளின் நடுவே வெண் டாமரை மலர் பூத்துக் குலுங்குகின்றது. கருவண்டுகள் அம் மலரை நாடி வந்து மொய்க்கின்றன' - ஆமூரின் வளம் இத்தகையது என்று பாராட்டுகின்றார் நத்தத்தனார்.

இவை எல்லாம் நத்தத்தனார், மருதநில வளத்தைப் பாடுவதில் விருப்பம் உடையவர் என்பதை விளக்கும் சான்றுகளாகும்.

சேரநாடு நானிலங்களும் ஒன்றோடொன்று மயங்கிக் கிடக்கும் நிலப் பகுதியாகும். இதனைச் சங்கப் புலவர் சிலரும் (புறம்:49) இளங்கோ அடிகளும் உற்று நோக்கிப் பாடியுள்ளனர். நத்தத்தனாரும் சேரநாட்டு வஞ்சியின் வளத்தைப் பாடும்போது நானில மயக்கத்தை மறவாமல், ஏற்றதொரு காட்சியை வஞ்சி நகரத்திற்கு அமைக் கின்றார்.

எருமை ஒன்று, நீரில் உள்ள மீன்கள் தன் கால்களில் பட்டு நசுங்குமாறு நடந்து சென்று, செங்கழுநீர்ப் பூக் களைத் தின்று விட்டு மிளகு கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலுக்குப் போகின்றது. அங்கே இருந்த மஞ்சள் இலைகள் தன் முதுகைத் தடவிக் கொடுக்க, காட்டு மல்லிகைக் கொடிமீது படுத்துக் கொண்டு அசைபோடு கின்றது. இந்தக் காட்சியைப் பாடி நானிலங்களும் சேரநாட்டில் மயங்கிக் கிடக்கும் அழகை மிக நுட்பமாக நத்தத்தனார் புலப்படுத்துகின்றார்.

பாலை என்று தனியாக ஒருவகை நிலம் தமிழகத்தில் இல்லை. வேனிற் காலத்தில்,

Koviloor Digital Library

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்
(சிலப்: 11-64-67).

என்பது இளங்கோ அடிகளின் வாக்கு. சங்க இலக்கியத்தில், பாலைத்திணை பாடும் புலவர்கள் வேனிற் காலத்தில் குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் வறண்டு பாலை நிலமாகத் தோன்றுவதையே பாடுகின்றனர். ஆனால் பிற் காலப் புலவர்கள் பாலையைத் தனி நிலமாக்கி, பொருந்தாத கற்பனையோடு அந் நிலத்தைப் பாடிக் களித்தனர். நத்தத்தனார் குறிஞ்சியும் முல்லையும் வேனிற் காலத்தில் பாலையாய் மாறிக் கொடுமை செய்வதாகப் பாடுகின்றார்.

நிலமடந்தையின் மார்பில் இருந்து அசையும் முத்து மாலை போல் கார் காலத்தில் மலையின் அருவி பாய்கின்றது. அருவி, மலையை விட்டு இறங்கி அருகே உள்ள காட்டிற்குள் நுழைகின்றது. மலையருவி கான்யாறாக மாறுகின்றது. ஆற்று நீர், கரையை மோதித் தாக்குவதால், அங்கே இருக்கும் பூம்பொழில் வருந்துகின்றது. குறிஞ்சியும் முல்லையும் கார் காலத்தில் வழங்கும் காட்சி இது. (1-6).

கார் காலம் போய் வேனிற் காலம் வருகின்றது. மலையில் அருவி இல்லை. கான்யாற்றில் நீர் இல்லை. குயில்கள் பூம்பொழிலினுள் நுழைந்து பூக்களைக் கோதி, கரிய ஆற்று மணலில் உதிர்க்கின்றன. நுண்மணல் வேலின் நுனிபோல ஆகிவிட்டது. வெயிலால் சூடேறிய பருக்கைக் கற்கள் அடியைக் கிழிக்கின்றன. ஞாயிற்றின் கதிர் சென்று பரவுவதால் பாலை நெடுவழி கொடியதாகின்றது. (7-11). இவ்வாறு பாலை நிலத்தைப் பாடித் தமிழ் மரபை வாழ வைக்கின்றார் நத்தத்தனார்.

மற்றொரு மரபையும் அவர் காத்துள்ளார். ஐவகை நிலங்களுள் எதைப் பாடினாலும் அந்த நிலம் எந்தப்

Koviloor Digital Library

பருவத்தில் சிறந்து விளங்குமோ அந்தப் பருவத்தை அந்த நிலத்தோடு இணைத்துப் பாடுவது தமிழ் இலக்கிய மரபு. சிறுபாணாற்றுப்படையிலும் அத்தகைய மரபைக் காண லாம். பாட்டின் தொடக்கத்தில் பாலை நிலத்தில் வேனிற் காலத்தில் பாணர்கள் சந்திக்கின்றனர். பரிசில் பெறச் செல்லும் பாணர்கள் சில நாட்களிலேயே-வேனிற் காலம் முடிவதற்குள்ளாகவே வள்ளலைக் காணமுடியும். ஆனால், நத்தத்தனார் பாணர்கள் செல்லும் வழியில் உள்ள பல்வேறு நிலங்களை எல்லாம் வேனிற் காலத்தோடு தொடர்பு படுத்திப் பாடவில்லை. வேலூரைச் சூழ்ந்துள்ள முல்லை நிலத்தைக் கார் காலத்தோடு தொடர்புபடுத்தியே பாடி யுள்ளார். இஃது எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்.

தாம் சொல்லும் கருத்திற்குப் பின்னணியாக இயற் கையைப் பாடும் போதும், அதன் நுட்பமறிந்து இலக்கிய மரபோடு பாடுகின்றார் நத்தத்தனார்.

> 'பண்டை இயற்கை வளங்கள் எல்லாம்-பத்துப்
> பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து,
> மண்டலம் எங்கும் கமழும் அருந்தமிழ்
> வாசம் நுகர்ந்து மகிழ் வோமே!'
>
> — கவிமணி

Alagappa university
Central Library
20053

Koviloor Digital Library

யாழும் இசையும்

மறைந்துபோன தமிழ்ச்செல்வங்களுள் யாழும் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், தமிழகமெங்கும் யாழிசை மண்டிக்கிடந்தது. யாழ்ப்பாணர் வாழும் சேரி களில் யாழிசை இனிது எழுந்தது. ஊரில் நடந்த விழாக் களில் யாழ் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. மன்னர் பேரவையில் யாழ் மதிப்போடு வீற்றிருந்தது. வள்ளல் களின் இல்லந்தோறும் யாழுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அது காதலையும் வீரத்தையும் மகிழ்ந்து பாடிய பாணர் களின் கையில் பொலிவுடன் விளங்கியது; அவர்களோடு தமிழகமெங்கும் பயணம் செய்து, இசையமுதை வாரி வழங்கியது.

சங்க நூல்களைக் கற்கும்போது, மறைந்துபோன யாழ் நம் கண் முன் தோன்றுகின்றது. அதன் தோற்றமும், அமைப்பும் நம் நெஞ்சத்தைக் கவர்கின்றன. யாழிசை விளைத்த இன்பத்தைப் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடும் போது, 'அத்தகைய இசைக் கருவியை இழந்துவிட் டோமே!' என்ற துன்ப நினைவு நம் நெஞ்சத்தில் எழு கின்றது. பல ஆண்டுகளாக இத்தகைய துன்ப நினைவு அறிஞர் பலர் உள்ளத்தில் எழுந்து கொண்டே இருந்தது. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிந்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சான்றோர் விபுலாநந்த அடிகள் யாழின் மறைவுக்குப் பெரிதும் வருந்தினார். அதனை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டுவர முயன்றார்.

Koviloor Digital Library

மறு பிறப்பு

விபுலாநந்தரின் பேருழைப்பால் யாழ்க் கருவியும், பழந் தமிழ் இசையும் மீண்டும் தமிழகத்தில் பிறந்தன. 'யாழ் நூல்' என்ற பெயரில், தம் அரிய ஆராய்ச்சிகளை அவர் வெளியிட்டுள்ளார். அவ்வரிய நூலை உருவாக்க அவர், பழந்தமிழ் இலக்கியங்களையும், பழைய உரைகளையும் பயன்படுத்தியுள்ளார். எட்டுத் தொகை, பத்துப் பாட்டு ஆகிய சங்க இலக்கியமும், சிலப்பதிகாரம் போன்ற பெருங் காப்பியங்களும், தேவாரப் பாடல்களும் அவருக்குப் பெரிதும் உதவின. திவாகரம், பிங்கலந்தை என்னும் இரு நிகண்டுகளும் துணைசெய்தன.

இவற்றோடு பல்லவர் காலத்துக் கலைகள் அவருக்கு வழி காட்டின. யாழ்க் கருவியின் உருவத்தை அவர் சிற்பங்களிலிருந்தும், ஓவியங்களிலிருந்தும் கண்டறிந்தார். இலண்டன் நகரத்திலும், சென்னை நகரத்திலும் உள்ள பழம் பொருட் காட்சிச்சாலைகளில் இருக்கும் யாழ்ச் சிற்பமும், யாழ் ஏந்திய இசை மாதர் ஓவியமும் அவருக்கு யாழின் வடிவத்தை நன்கு விளக்கிக் காட்டின.
(யாழ்நூல்-பக் 0.41)

யாழ்க் கருவியின் பண்டைய அமைப்பைக் காண விரும்புவோர், காஞ்சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலில் உள்ள சிற்பங்களில் காணலாம்; புதுக்கோட்டைக்கு அருகே புள்ள திருமெய்யம் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் கருவறைச் சுவர்மீது, சிற்பவடிவில் உள்ள முனிவர் கூட்டத்தில் உள்ள நாரதர் கையில் இருக்கும் யாழ்க்கருவியைக் காணலாம். (சிற்பமும் கலை வாழ்வும்-பக். 90)

யாழ்நூலை இயற்றித் தமிழகத்திற்கு அருளிய விபுலாநந்தர், யாழ்க் கருவி ஒன்றைத் தாமே முன்னிருந்து செய்வித்து வழங்கியுள்ளார். அந்த யாழ், சென்னையில் உள்ள அண்ணாமலை மன்றத்தில் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

அதைக் காண்போர், 'மறைந்துபோன யாழ் மறு பிறப்பு எடுத்துவந்து விட்டதே!' என்று மகிழ்ச்சி யடைவர்.

யாழின் வடிவமும் உறுப்புக்களும்

திருவள்ளுவர், 'யாழ்கோடு'-என்று கூறுவதால் (குறள்: 279) யாழ் வளைவாக இருந்தது என்று அறியலாம். கண்ணைக் கவரும் பல்வேறு வண்ணங்களோடு விளங்கிய யாழ், மணமகள் போலத் தோற்றப் பொலிவோடு விளங்கிற்று என்று புலவர்கள் குறிப்பிடுகின்றனர். (பொருந 19, 20. சிலம்பு: 2-4)

இனி, யாழின் பல்வேறு உறுப்புக்களையும் அவற்றின் வடிவங்களையும் காண்போம். யாழ் நூலில் (உறுப்பியல்: பக்.-31-52) இவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

1 பத்தர்:

இது யாழின் அடிப்பகுதி; ஒரு கோளத்தைப் பாதியாக வெட்டி எடுத்ததுபோல இருக்கும். தோணி வடிவமாகவும் மகர மீன் வடிவமாகவும் செய்யப்படுதலும் உண்டு. பத்தரை அகளம் என்றும் பத்தல் என்றும் கூறுவர். பத்தர் தரையில் படியும் கீழ்ப் பகுதி, மான் குழம்பு அழுந்திஞல் ஏற்படும் பள்ளம்போல, நடு உயர்ந்து இரு புறமும் குழிவாக இருக்கும்.

2 வறுவாய்:

பத்தரின் குழிவான உட்பகுதி வறுவாய் எனப்படும். இஃது எட்டாம் பிறைபோல, அரை வட்டமாய்த் தோன்றும். பத்தரின் மேற்புறத்தில் ஒரு பாதியே வறுவாய் ஆக்கப்பட்டிருக்கும். இதன் வழியாய் மற்றப் பாதி மரமும் குடைந்து எடுக்கப்பட்டிருக்கும்.

8 மருப்பு:

இது, கோடு அல்லது தண்டு என்று கூறப்படும்; பாம்பு படம் எடுத்தாற்போல நிமிர்ந்து, வளைந்து, திரண்டு

Koviloor Digital Library

நிற்கும். இதன் அடிப்பகுதி பத்தரோடு இணைக்கப்பட்டிருக்கும்.

4 யாப்பு:

இது பத்தரின் உள்ளே-வறுவாயின் இடையில் வைக்கப்படும். இது பத்தரின் குறுக்களவே நீளமாகக் கொண்டு, சிறு விரற்பருமனுக யானைத் தந்தத்தால் செய்யப்படும்; நரம்பு தொடுக்கவும் நரம்பின் அசைவைப் பத்தரிலே தாக்கி ஒலிக்கவும் பயன்படும்.

5 உந்தி:

இது போர்வைத் தோலிற்கும் யாப்பிற்கும் இடையில் அமைந்து இருக்கும்; மூங்கிலை நெடுகப் பிளந்து எடுத்தாற் போல, நீளமாய் மேற்புறம் நெடுக வளைந்திருக்கும்; பொல்லம் பொத்துதலின் கீழே போர்வைத் தோலைத் தாங்கி நிற்கும். யாப்பில் கட்டிய நரம்புகள் இதன் வழியாய் வர இதன் நடுப்பாதிவரை நெடுகப் பிளவுபட்டிருக்கும்.

6 போர்வை:

பத்தரின் மேற்புறத்தில்-வறுவாயை மறைக்க மூடப்படும் வட்டமான தோல், போர்வை அல்லது பச்சை எனப்படும். இது துவர் ஊட்டப்பெற்று, கண்ணைக் கவரும் செந்நிறத்தோடு விளங்கும்.

7 பொல்லம் பொத்துதல்:

போர்வைத் தோல், செம்பாதியாக நடுவரை பிளவு செய்யப்பட்டுப் பின், இரு விளிம்புகளும் சேர்த்துத் தைக்கப்படும். இவ்வாறு தைத்தல், பொல்லம் பொத்துதல் எனப்படும்.

8 ஆணிகள்

போர்வைத் தோலினைப் பத்தருடன் பொருத்தச் சுள்ளாணிகள் தைக்கப்படும். இந்த ஆணிகளின் தலை,

Koviloor Digital Library

தோலுக்கு வெளியே நண்டின் கண்களைப்போல், போர்வைத் தோலின்மீது நீட்டிக்கொண்டிருக்கும்.

9 திவவு:

திவவு என்பது மருப்பின் முற்பகுதியில் கட்டப்படும் வார்க்கட்டு. ஒன்பது வார்க்கட்டுகள் இருக்கும். ஒவ்வொரு வார்க்கட்டிலும் ஒரு நரம்பின் நுனி இறுகக் கட்டப்பெறும். வார்க்கட்டுகளைத் தளர்த்தியும், நகர்த்தியும் நரம்புகள் சரி செய்யப்படும்.

10 நரம்புகள்:

பெரும்பாலும் ஒன்பது நரம்புகள் இருந்தன. மெல்லிய கொடு முறுக்கு அற்ற நரம்புகள் செவ்வையாகத் திரித்து அமைக்கப்படும். நரம்பின் ஒரு நுனி வார்க்கட்டிலும், மற்றொரு நுனி பத்தரின் உள்ளே வறுவாயின் குறுக்கே வைக்கப்படும் யாப்பிலும் இறுகக் கட்டப்படும்.

11 கவைக்கடை

இது யாழை நிறுத்த, பின்புறமாக வைக்கப்படும் முட்டுக் கோல்; சிறிய அம்புபோல் நீண்டு, வாய்ப்புறம் மூன்றும் பிறை போன்ற அமைப்புடன் இருக்கும்.

சீறியாழ்:

இதுவரை பொதுவாக யாழின் பல்வேறு பகுதிகளைக் கண்டோம். அவற்றை நினைவில் கொண்டு, சீறியாழின் அமைப்பையும் உறுப்புக்களையும் இனிக் காண்போம். சீறியாழைப்பற்றிச் சிறுபாணாற்றுப்படை இயற்றிய நத்தத்தனுர் இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். (சிறுபாண்: 34, 5; 221-229)

சீறியாழின் தோற்றமும் உறுப்புக்களும் சிறந்த உவமைகளால் விளக்கப்படுகின்றன. கருங்குரங்கின் கையைச் சுற்றிய பாம்புபோல, யாழ்த் தண்டில் வார்க்கட்டுகள்

Koviloor Digital Library

உள்ளன. பத்தரின் ஓரங்களில் மணிகளை அடுக்கிவைத்தது போல ஆணிகள் தோன்றுகின்றன. குமிழம் பழத்தின் நிறத்தைப் போலப் போர்வைத்தோல் விளங்குகின்றது. முறுக்கு இல்லாத நரம்புகள், தேனை ஒழுகவிட்டதுபோலப் பொலிகின்றன. நத்தத்தனார் சீறியாழை இவ்வாறு புனைந்து காட்டுகின்றார்.

சீறியாழுக்குக் 'கவைக்கடை' என்ற முட்டுக்கோல் கூறப்படவில்லை. ஆதலின் சீறியாழ் வாசிப்போர் அதைத் தரையில் வைக்காமல், பத்தரை மடியில் வைத்து அமர்ந்து இடக்கையால் தண்டைப் பற்றிக் கொண்டு வலக் கையால் நரம்புகளைத் தடவி வாசித்திருக்க வேண்டும். நின்று கொண்டும் வாசித்திருக்கலாம்.

> "இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ
> கைவல் பாண்மகன் கடனறிந்து இயக்க"
>
> (சிறுபாண்:36, 7,

என்ற அடிகள் யாழ் வாசிக்கும் முறையை உணர்த்து கின்றன.

இசைக் கலை:

சிறுபாணாற்றுப்படை இசைக் கலைஞரின் வாழ்க்கை யைப் புனைந்து பாடும் பாடல் ஆகும். அதனால் அதில் பல இசைக் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அவை பழந் தமிழகத்தில் மண்டிக் கிடந்த இசைவளத்தை உணர்த்து கின்றன. நத்தத்தனார்,

> நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
> கைவல் பாண்மகன் கடனறிந்து இயக்க
>
> (சிறுபாண்: 36, 7)

என்று பாடித் தம் இசைப்புலமையை வெளிப்படுத்து கின்றார். நட்ட பாடை என்னும் பண்முற்றுப் பெற்ற பாலை யாழை இசையில் வல்ல பாணன் முறையறிந்து வாசிப்ப தாகக் கூறுகின்றார் அவர்.

Koviloor Digital Library

மருதத் தண்பணையில் உள்ள தாமரை மலரில் வாழும் வண்டு சீகாமரம் என்னும் பண்ணைப் பாடுவதாய்,

காமரு தும்பி காமரம் செப்பும் (77)

என்ற அடியில் குறிப்பிடுகின்ருர். வண்டின் பாடல் சீகாமரம் என்னும் பண்போன்று இருந்தது என்னுமல், இவ்வாறு கூறி இருப்பது எண்ணி மகிழத்தக்கதாகும்.

பரிசில் பெற்று மீளும் பாணர் நல்லியக்கோடனையும், அவனது மலை வளத்தையும் பாடிக்கொண்டு முன்னுள் சென்றதாய் நத்தத்தனுர் சொல்லுகின்ருர்:

கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தலையவிழ் தெரியல் தகையோற் பாடி
அறற்குழல் பாணி தூங்கி (160-172)

தாங்கரு மரபின் தன்னும் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னுள் சென்றனம் (127-129)

பாணர்கள் கலைப் பறவைகள்; பாடுவதில் இன்பம் காண்பவர்கள். அதனுல், செல்லும் வழியெல்லாம் பாடுகின்றனர்; வள்ளலின் புகழைப் பாடிக்கொண்டே செல்கின்றனர்.

நத்தத்தனுர், சீறியாழைக் குறிப்பிடும்போது,

பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்னியம் (228-9)

என்றும், சீறியாழ் வாசித்தலை,

.........குரல் குரலாக
நூல்நெறி மரபின் பண்ணி (229-30)

என்றும் கூறுகின்ருர். பண்டைக் காலத்தில் இசைக் கலை பற்றிய நூலும், இசைப் புலமையும் மிகுதியாய் இருந்ததை இவை உணர்த்தும்.

Koviloor Digital Library

மக்கள் வாழ்க்கையும் நாகரிகமும்

சிறுபாணாற்றுப்படை, சங்ககாலத்துத் தமிழ்ச் சமுதாய நிலையை அறியத் துணைபுரிகின்றது. அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கை, தொழில், கலை, உணவு, உடை, அணிகள், பழக்கவழக்கம், பண்பாடு-ஆகியவை அதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

முடிமன்னர் மூவர்: சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேர சோழ பாண்டியர் என்ற மன்னர்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்தனர். சேர நாட்டைச் சேரர் மரபில் வந்த-இமயத்தில் வில்லைப் பொறித்த 'குட்டுவன்' என்பான் ஆண்டு வந்தான். அவனது தலைநகரம் வஞ்சியாகும். (47-50). முத்துக்குப் பேர்போன கொற்கைத் துறைமுகம் பாண்டியர்க்கு உரியதாய் இருந்தது. பாண்டியரின் தலைநகரமாக விளங்கிய மதுரையில் தமிழ் நிலைபெற்றிருந்தது. (62-67).

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை' (66-7)

என்று நத்தத்தனார் மதுரையைப் புகழ்ந்துள்ளார். மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு இவ்வடிகள் சான்றாக உள்ளன. சோழ நாட்டை, பகைவரது தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் உறையூரில் தங்கிச் செங்கோல் செலுத்தினான் (79-88).

வள்ளல்கள் எழுவர்: நத்தத்தனார் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் வாழ்ந்து வந்த வள்ளல்கள் எழுவரும்

Koviloor Digital Library

இறந்து விட்டனர். அவர்களின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவிக் கிடந்தது. கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய பேகன்; காட்டு முல்லைக்குத் தேர் நல்கிய பாரி; இரவலர்க்கு வரையாது கொடுத்த காரி; ஆலமர் செல்வனாகிய நீலகண்டனுக்கு நீலநிற ஆடை நல்கிய ஆய்; ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதிகன்; நண்பர்க்கு வேண்டிய பொருள் கொடுத்து ஆதரித்த நள்ளி; வளமான தன் மலை நாட்டைக் கூத்தர்க்குத் தந்த ஓரி—ஆகிய எழுவர் புகழும் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தது. (84-118).

பரிசிலர்: பொருநரும், புலவரும், அந்தணரும் வள்ளல்களிடம் சென்று பரிசுபெற்று வாழ்ந்து வந்தனர். (203, 4). யாழிசையில் வல்ல பாணர்கள், நாடு நாடாய் அலைந்து, புரலவலர்களிடம் சென்று பாடிப் பிழைத்தனர். வறுமையும் செல்வமும் அவர்கள் வாழ்வில் மாறி மாறி அமைந்திருந்தன. செல்வரும் வறியவரும்:- செல்வர்கள் உயர்ந்த இல்லங்களில் சிறப்பாக வாழ்ந்தனர்; மன்னர்கள் அரண் மிகுந்த கோட்டைகளில் வாழ்ந்தனர். வறியவர்கள், இடிந்த சுவரும் சரிந்த கூரையும் உடைய வீட்டில் வாழ்ந்து கொண்டு துன்புற்றனர். செல்வர்கள் அறுசுவை உண்டியைப் பொற்கலத்தில் உண்டு மகிழ்ந்தனர். அவர்கள் உண்ட உணவு, பாண்டவரில் ஒருவனாகிய வீமன் இயற்றிய சமையலைப் பற்றிய நூலில் கண்ட முறைப்படி அமைந்திருந்தது (241). வறியவர்கள் குப்பையில் முளைத்த வேளைக் கீரையை உப்பின்றிச் சமைத்து உண்ணும் நிலையிலும் இருந்தனர். செல்வர்கள் மெல்லிய ஆடையை உடுத்தும் சிறந்த மதுவை உண்டும் மகிழ்ந்து வாழ்ந்தனர்.

ஆடவரும் மகளிரும்: ஆடவர் தம் தோளில் தொடி அணிந்தனர் (81); சந்தனம் பூசினர் (98). அரும்பும் தளிரும் விரவிக் கட்டிய மாலையை அணிந்தனர். (161, 267).

Koviloor Digital Library

மகளிர் தம் கூந்தலுக்கு அகிற்புகையூட்டி (263), வாழைப் பூப்போலத் திரட்டி முடித்தனர் (22); சிலர் முதுகுப்புறமாகப் பின்னித் தொங்க விட்டனர் (191). உள்ளங்கைக்குச் செஞ்சாயம் ஊட்டி அழகு செய்தனர் (74). முல்லைமலர் சூடுவதைக் கற்புடைய மகளிர் பெரிதும் விரும்பினர் (30). மகளிர் நீர்த்துறையில் நீராடும் போது, நீரில் மிதந்து வந்த நாகம் அகில் ஆரம் ஆகிய மரங்களைத் தோள்புணையாகக் கொண்டு நீந்தி மகிழ்ந்தனர். (116-7).

பாரதக் கதையை அக்காலத் தமிழ் மக்கள் அறிந்திருந்தனர். பாண்டவரில் ஒருவனான அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரித்தது, அவன் அண்ணனாகிய பீமன் சமையற்கலை பற்றி நூல் இயற்றியது, அந்நூலில் கூறப்பட்டுள்ள முறைப்படி தமிழ் மக்கள் உணவு சமைத்தது-ஆகியவை நத்தத்தனாரால் குறிப்பிடப்படுகின்றன (238-241).

இதுவரை, பொதுவாக அக் கால மக்களின் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் கண்டோம். இனி, ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைக் காண்போம். நத்தத்தனார் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த உமணர், பரதவர், முல்லை நிலத்தில் வாழ்ந்த எயினர், மருத நிலத்தில் வாழ்ந்த உழவர்-ஆகியவர்களின் வாழ்க்கையை விளக்கமாகப் பாடியுள்ளார்.

முத்து விளையும் கொற்கைத் துறைமுகத்தைச் சூழ்ந்துள்ள நெய்தல் நிலத்தில் வாழும் உப்பு வணிகராகிய உமணர் செல்வச் செழிப்போடு வாழ்கின்றனர். உமணரது உப்பு வண்டிகள் வரிசை வரிசையாகச் செல்கின்றன. ஒரு வண்டியின்மீது உமணச் சிறுவர் பலர் அமர்ந்துள்ளனர். அவர்களின் நடுவே மந்தி ஒன்று உள்ளது. மந்தியின் மார்பில், நுணா மரத்தால் செய்து, சாதிலிங்கம் தோய்த்த மணியும், அதன் நெற்றியில் நெட்டியால் செய்த மாலையும் அழகாக விளங்குகின்றன. அந்த மந்தியின்

Koviloor Digital Library

கையில் கிலுகிலுப்பை உள்ளது. இரண்டு கிளிஞ்சில்களை ஒன்றின்மீது ஒன்று படியுமாறு பொருத்தி, உள்ளே முத்துக்களைப் போட்டுக் கிலுகிலுப்பையாக அதன் கையில் கொடுத்துள்ளனர். அந்தக் கிலுகிலுப்பையை ஆட்டிக் கொண்டு உமணச் சிறுவர்களுக்கு மகிழ்வூட்டுகின்றது அம் மந்தி (51-62). இக் காட்சி அக் காலத்து உமணர்களின் வாழ்க்கையை விளக்கும் ஓவியமாக விளங்குகின்றது.

எயிற்பட்டினத்தை அடுத்துள்ள கடற்கரையில் வாழும் பரதவர் வாழ்க்கை எளிமையானது. கடல்அலை கொண்டு வந்து கரையில் ஒதுக்கிய மரக்கட்டைகளை விறகாகப்பயன் படுத்தி, நுளைச்சியர் பழத்திலிருந்து எடுத்த மதுவைக் காய்ச்சுகின்றனர். அம் மதுவைப் பரதவர் உண்டு, விருந்தினர்க்கும் தருகின்றனர். பிறகு பாடிக்கொண்டு குழலோசையின் தாளத்திற்கு ஏற்ப ஆடுகின்றனர்; மீனைச் சுட்டு உண்ணுகின்றனர் (155-163).

வேலூரைச் சுற்றியுள்ள முல்லை நிலத்தில் எயினர் வாழ்வதாய் நத்தத்தனார் கூறுகின்றார். அவர்கள் வெயிலின் கொடுமைக்கு ஆற்றாது தம் குடிசையில் ஒதுங்கி வாழ்கின்றனர். எயிற்றியர் இனிய புளிச்சோறும், காட்டுப் பசுவின் இறைச்சியும் சமைத்து விருந்தினர்க்கு அளிக்கின்றனர். (174-77).

மருத நிலத்தில் உள்ள ஆமூரில் வாழும் உழவர்கள் விருந்தினரைப் பேணும் முறை உயர்வானது. உழத்தியர் தம் வீட்டிற்கு வந்த விருந்தினரைத் தம் பிள்ளைகளைவிட்டுத் தடுத்து நிறுத்துகின்றனர். இரும்புப் பூண் கட்டிய உலக்கை கொண்டு குற்றி எடுத்த அரிசியைச் சோறாக ஆக்கி, நண்டும் பீர்க்கங்காயும் கலந்து கறி சமைத்து விருந்தினர்க்குத் தருகின்றனர். (190-195) மக்களின் வாழ்க்கையை நத்தத்தனார் இவ்வாறு இயற்கையாகப் பாடியுள்ளார். உள்ளதை அவர் மறைக்கவில்லை; இல்லாததைக் கூறவில்லை.

Koviloor Digital Library

தம் காலத்தில் ஊர்தியாகப் பயன்பட்ட தேரை அவர் மிக அழகாகப் புனைந்து காட்டுகின்றார். தேரின் பல் வேறு உறுப்புக்களைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். (250-260). தேர்ச் சக்கரத்தின் உறுப்புக்களாகிய குறடு, ஆரம் இரண்டையும் தக்க உவமைகளால் விளக்கி யுள்ளார். செந்நிறம் பூசப்பட்ட பலகை உடைய தேர்த் தட்டையும் குறிப்பிட்டுள்ளார். தேரை, 'ஊர்ந்து பெயர் பெற்ற எழில்நடை பாகர்' (258) என்று பாராட்டியுள் ளார். தேரை இழுக்கும் எருதுகளை, குதிரையைவிட விரைந்து ஓடுபவை என்று புகழ்ந்துள்ளார் (259-60). இத்தகைய தேரையும் எருதுகளையும் நல்லியக்கோடன் பரிசாகப் பாணர்களுக்கு நல்குவான் என்று புலவர் பாடி யுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையைக் கற்போரைத் தம் காலத் திற்கு அழைத்துச் சென்று, அப்காலச் சமுதாயத்தைக் காட்டி மகிழ்விக்கின்றார் நத்தத்தனார்.

Koviloor Digital Library

எதிரொலி

சிறுபாணாற்றுப்படையை இயற்றிய நத்தத்தனாரின் குரல், காலமும் இடமும் கடந்து வந்து அவருக்குப் பின் தோன்றிய இலக்கியங்களில் எதிரொலிக்கின்றது. சிறுபாணாற்றுப்படையைப் போற்றிக் கற்ற, பிற்காலக் கவிஞர்களின் நெஞ்சத்தில் நத்தத்தனார் ஆற்றல் மிகுந்த குரல் நன்கு பதிந்து அவர்கள் இயற்றிய பாடல்கள் வாயிலாக வெளிப்படுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங் களிலும் நத்தத்தனாரின் குரல் சில இடங்களில் நன்கு எதிரொலித்துத் தெளிவாகக் கேட்கின்றது. அத்தகைய இடங்களைக் கீழே காண்போம்:

''மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செப்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று''

என்ற அடிகள் சிறுபாணாற்றுப்படையின் தொடக்கத்தில் அமைந்து மாநில மடந்தையின் தோற்றத்தைப் புனைந்து கூறுகின்றன. இந்த அடிகளோடு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மண்ணக மடந்தையைப் பாடும் வரிகள் ஒப்பிடத் தக்கவை.

''அகநீ ராடை மலைமுலை ஆகத்து
ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை''

(சிலப். 5; 1-6)

Koviloor Digital Library

சிறுபாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ள

'அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்'

(சிறுபாண், 263)

என்ற அடி சிலப்பதிகாரத்தில்,

"அகிலுண விரித்த அம்மென் கூந்தல்"

(சிலப் வஞ்சி: 28-17)

என்று அப்படியே வருகின்றது.

குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணி

(சிலப்: 267)

என்ற சிறுபாணாற்றுப்படையின் அடி,

'கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான்'

(சிலப் : 30-46)

என்ற சிலப்பதிகார வரியுடன் ஒத்துள்ளது.

மணிமேகலையின் ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார்,

'இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து'

(சிறுபாண்: 243)

என்ற சிறுபாணாற்றுப்படையின் அடியைச் சிறிதும் மாறுதல் இன்றி, மணிமேகலையின் பதிகத் தொடக்கத்தில் முதல் வரியாக அமைத்துள்ளார்.

பெருங்கதை ஆசிரியரின் உள்ளத்தைச் சிறுபாணாற்றுப்படையில் வரும் விறலியரின் வருணனை (13-31) பெரிதும் கவர்ந்துள்ளது. நத்தத்தனாரைப் பின்பற்றி அவரும் அந்தாதித் தொடையாக வாசவதத்தையின் அழகைப் பாடியுள்ளார்:

யாற்றறல் அன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்

Koviloor Digital Library

பிறையெனச் சுடரும் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றும் கறையில் வாண்முகம்
கிளியென மிழற்றும் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயின் அன்ன ஒள்ளுகிர்
வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவல்
காந்தள் முகிழன்ன மெல்விரல் காந்தட்
பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை (4-11: 67-79)

இவ் வடிகளைச் சிறுபாணாற்றுப்படை விறலியரின் வருணனை கூறும் அடிகளோடு ஒப்பிட்டால் அவற்றிலுமுள்ள ஒற்றுமை புலப்படும்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர அடிகளின் நெஞ்சத்தில் சிறுபாணாற்றுப்படை மிகவும் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. அவர் பாடியுள்ள காசிக் கலம்பகத்தில் பாணாற்றுப்படைப் பாடலில் (58), நத்தத்தனாரின் கருத்தும் சொல்லும் நன்கு பதிந்துள்ளன. அவ்விரு பாடல்களின் ஒப்புமைப் பகுதிகளும் கீழே தரப்பட்கின்றன.

.........தேம் பெய்து
அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்
(சிறுபாண். 226)

இழுமென் மழலை இன்னமுது உறைப்பப்
பிழிதேன் ஒழுக்கின் ஒழுகும்இன் நரம்பின்
(காசிக். பாணாற்: 1-2)

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழற் காளாம்பி
(சிறுபாண்: 133-4)

நீர்வாய்ச் சிதலையும் நூல்வாய்ச் சிலம்பியும்
சிலவிட மேய்ந்த சிறுபுன் குரம்பை
(காசிக். பாணாற்: 10-11)

Koviloor Digital Library

துனிகூர் எவ்வமொடு துயராற்றுப் படுப்ப
(சிறுபாண்: 39)

கடவுள் நல்லூழ் பிடர்பிடித்து உந்த
(காசிக். பாணுற்: 22)

நெடுவரை வளனும் பாடி (சிறுபாண்: 128)

திருநகர் வளமை பாடி (காசிக். பாணுற்: 42)

பத்துப்பாட்டில் உள்ள சிறுபாணாற்றுப்படையும் காசிக் கலம்பகத்தில் உள்ள பாணாற்றுப்படையும் அமைப்பிலும் கருத்திலும் சொல்லாட்சியிலும்பெரிதும் ஒத்துள்ளன.

சிறுபாணாற்றுப்படை காலந்தோறும் விரும்பிக் கற்கப் பட்ட பாடலாக இருந்து வந்துள்ளது. வருங்காலத்திலும் அப் பாடல் போற்றிக் கற்கப்படும்.

Koviloor Digital Library
Alagappa university
Central Library
20053
அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

வளமான பாட்டு

சிறுபாணாற்றுப்படையைப் படித்துவிட்டு மூடும் போது, வளமான பாட்டு ஒன்றைப் படித்த மன நிறைவு ஏற்படுகின்றது. இலக்கியச் சுவையில் திளைத்த நம் உள்ளம் இன்ப உணர்ச்சியால் கிளுகிளுக்கின்றது. அப் பாடலைக் கற்கும்போது சொல்லழகில் தோய்ந்து, ஓசை இன்பத்தில் ஈடுபட்டு, உவமை வளத்தில் மூழ்கி, கற்பனைச் சிறப்பில் திளைத்து, இயற்கைக் காட்சியில் மகிழ்ந்து நாம் பா நயத்தைப் பருகுகின்றோம். பாணரின் பண்பையும் நல்லியக்கோடனின் நல்லியல்பையும் அறிந்து இன்புறுகின்றோம். பல நூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த தமிழ் மக்களோடு ஒன்றிக் கலந்து அவர்கள் வாழ்க்கையையும், நாகரிகத்தையும் கண்டு மகிழ்கின்றோம்.

சிறுபாணாற்றுப்படையில் வானவில்லின் எழில், வெண் முகிலின் தூய்மை, மழை நீரின் தன்மை, மின்னலின் ஒளி, இடியின் ஒலி ஆகியவை எல்லாம் ஒருங்கே இடம் பெற்றுள்ளன. அப் பாடலைச் சொற்களுக்காக ஒருமுறை, ஓசைக்காக ஒருமுறை, உவமைக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒருமுறை, இயற்கைக் காட்சிக்காக ஒருமுறை—கற்க வேண்டும். ஒவ்வொரு முறை கற்கும்போதும், அப் பாடல் புத்தம் புதிதாகத் தோன்றி இன்பமூட்டும்.

காட்டுநெடு வானம்
கடல்எல்லாம் விந்தைஎனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா!

—பாரதியார்.

ALAGAPPA COLLEGE L...
PGL
2185